பார்த்திவ ஹூ
ஐப்பசி - கார்த்திகை மீ

ஸம்புடம் - 4
ஸஞ்சிகை - 11

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

November, 1945.
Vol. 4, No. 11

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

பக்கம்.

1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் 152
2. ஸ்ரீ தேசிகன் வரைந்த சித்திரம் 157
3. அஹோபிலம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவங்கமாலை 161
4. ஸ்ரீ தத்வம் 164
5. ஹிந்துமத எண்டௌமெண்ட் ஆக்டில் செய்யப்போவதாயிருக்கும் மாறுதல் மசோதா மறுப்பு மஹஜர்.... 169
6. செய்திகள் 174
7. ஸம்பாதகரின் குறிப்புகள்.... 176

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 4	பார்த்திவ ௵ ஐப்பசி-கார்த்திகை௴	ஸஞ்சிகை 11

21042

8-NOV 1945

"அஹோபிலே கருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

—∘∞∘—

ஸ்ரீ ந்ரு ஸி ம் ஹ ப் ரி யா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி
ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஸ்யைஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[5-ம் அங்கம்]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருச்சி.]

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை - 10, பக்கம் - 127ன் தொடர்ச்சி]

"நிரவதிகுண க்ராமே ராமே நிராகஸி ஸாகஸி
ஸ்மரணசுஷிதா லோகா லோகாபசஞ்சி ஸசஞ்சிகே ।
வரதநுஹதிம் வாலித்ரோஹம் ச நாகவஸங்கணம்
பரிசிதகுணே ப்ரஷ்டாபத்யைச்சயா கிஞ்சாஸதே ॥"

இந்த ச்லோகம் ஸுபாஷித நீவியிலும் உள்ளது.

"ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா: ।
ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி ॥"

என்று ஸகல லோகமும் ராமகுண வஸீக்ருதமாய் ராமமய மாயிற்று. ஈச்வரனும் இதை அநுஸரித்து ராம நாமத்தை மூன்று தரம் படித்து, ராமனிடத்தில் தான் ரமிப்பதாகத் தம் தேவியினிடம் கூறுகிறார். 'குண க்ராமே ராமே' என்றார் முராரி. 'நிரவதிகுண க்ராம' ரென்று ராமனைச் சொல்லவேணுமென்கிறார் ஸ்வாமி. இந்த ச்லோகத்திற்கு ஸுபாஷிதநீவி உரையில் வ்யாக்யாநம் விவரித்துள்ளோம். ராமனிடமும் அஸூயாளுக்கள் மூன்று தோஷங்கள் உண்டென்று அவனைப் பழிக்கிறார்கள். அவைகளில் ஒன்று தாடகை வதம். அவள் பெண்பால் என்று கக்ஷி. 'வரதநு' என்று பெண்ணிற்குப் பெயர். இவள் அதிகோரமான சரீர முடையவள். 'வரதநு' என்னும் பெண்ணுக்கு ஸாமாந்யமான பெயர் இந்தக் கோர தநுவிற்கு எப்படிப் பொய்யோ, அப்படியே இந்தக் கொடிய ராக்ஷஸியைப் பெண்ணென்று பாவிப்பதற்கே தகாது என்பதைத் தாடகையை 'வரதநு' என்று குறிப்பதால் ஸ்வாமி வ்யஞ்ஜநம் செய்யும் அழகு ரஸிக்கத்தக்கது. அப்படியே 'வாலித்ரோஹம்' என்பதில் 'த்ரோஹ' பதத்தால் வாலியை வதம் செய்தது ராமன்பேரில் குற்றம் சொல்லக்கூடிய தல்ல வென்பது, பட்டப் பகலைப்போல் விளக்கப்படுகிறது. வாலிக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்து இந்த்ரன் குமாரனைப் பிறப்பித்ததே, இந்த்ராதி தேவர்கள் சத்ருவும் முக்யமாய் இந்த்ர சத்ருவுமான ராவணாதிகளைக் கொல்லுதற்குத்தான். தேவர்கள் கோரிக்கைப்படி அவதரித்த ராமனுக்கு ஸீதையைத் தேடி ராவண யுத்தத்தில் ஸஹாயம் செய்வதற்காக. ராமன் முதலிய நால்வரும் ப்ரஹ்மேந்த்ராதி தேவர்கள் இஷ்டப்படி கர்ப்பத்தில் அவதரித்ததைப் பால காண்டம் 16-வது ஸர்க்கத்தில் கூறிவிட்டு, 17-வது ஸர்க்கத்தில், அவர்கள் கர்ப்பத்தில் இருக்கையிலேயே ப்ரஹ்மாதி தேவர்கள் ராவண யுத்தத்தில் ராம ஸஹாயமாக ஸேனையா யிருப்பதற்காகத் தங்கள் அம்சங்களாக அப்ஸர ஸ்த்ரீகளிடமும், வாநர ஸ்த்ரீகளிடமும் பலவான்களாக வாநரர்களையும் கரடிகளையும் பிறப்பிக்க

வேணு மென்று தீர்மானித்து, வாலி ஸுக்ரீவன் முதலியவர்களைப் பிறப்பித்ததாக வர்ணித்திருக்கிறது. ப்ரஹ்மாவும் தன் பங்குக்கு ஏற்கெனவே ஜாம்பவானைப் பிறப்பித்ததாகச் சொல்லுகிறார்.

> "வானரேந்த்ரம் மஹேந்த்ராபம் இந்த்ரோ வாலிநமாத்மஜம் ।
> ஜநயாமாஸ"॥

என்று தேவர்களின் நாயகனும் பலத்திற்குத் தேவதையுமான இந்த்ரன், தன் புத்ரனாக வாலியை மஹாபலத்தைக் கொடுத்துப் பிறப்பித்தான். இந்த்ரன் அவனுக்குக் கொடுத்த பலம் ராம ஸஹாயமாக ராவணாதிகளை ஜயிப்பதற்காக. தாபஸ வ்ரதமுடைய ராமனுக்குத் தக்கபடி, சிறிது பணச் செலவும் உணவு வகைகளுக்கு யாதொரு ச்ரமமும் தேவையில்லாத வானர ஸைந்யத்தைத் தேவர்கள் ராம ஸஹாயத்திற்கென்றே மிக்க பலத்தைக் கொடுத்து ஸ்ருஷ்டித்தார்கள். வாலிக்குக் கொடுத்த பலம் ராமன் உதவிக்காக. ராமன் அவதாரம், இந்த்ராதி தேவர்கள் சத்ருக்களை ஸம்ஹரிப்பதற்காக. இந்த்ரனைக் கட்டின மேகநாதனுக்கு இந்த்ரஜித் என்று பெயர் வழங்கிவந்தது. தன் சத்ருக்களை ராமன் கொல்லவேண்டிய யுத்தத்தில் முக்ய ஸேநாநாயகனாக இருக்க, வாலியை இந்த்ரன் தன் புத்ரனாகப் பெற்றான்; அன்றியும் அபரிமித பலத்தையும் கொடுத்தான். 'ராவணவதாகாங்க்ஷிண:' என்று வாலி முதலியவர்கள் ராவணனைக் கொல்வதிலேயே கருத்துடையவராய் ராமாகமநத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருந்தார்கள். 'ராமஸஹாயஹேதோ:' என்று 17வது ஸர்க்கத்தின் கடைசிப் பதம். தகப்பனாகிய இந்த்ர ஸஹாயத்திற்கும், இந்த்ரன் ஸஹாயத்திற்காக அவதரித்த ராமன் ஸஹாயத்திற்குமாகக் கொடுக்கப்பட்ட பலத்தை, வாலி அவர்களுக்காக உபயோகப்படுத்தக் கடமைப்பட்டவன். அப்படி அவன் செய்யாவிடில், இந்த்ர த்ரோஹமும் ராம த்ரோஹமும் உலகத்தைப் படைத்த ப்ரஹ்மாவின் கட்டளைக்கு த்ரோஹமுமாகும் என்பதில் தடையில்லை. உத்தர காண்டத்தில் 34-வது ஸர்க்கத்தில், வாலியை ஜயிப்பதற்காகப் போன ராவணனை வாலி தன் கழுக்கட்டையில் அடக்கிக்கொண்டு ஸமுத்ராத் ஸமுத்ரம் தன் நித்யாநுஷ்டாநமான காயத்ரி ஜபத்திற்காகத் தாண்டிக் கிஷ்கிந்தையில் தொப்பென்று கீழே போட்டதையும், ராவணன்

> "ஸுஹோ பலஸஹோ வீர்யஸஹோ ஶ்ரீமான் வீர்யஸமேவ ச ।
> யேநாஹம் வஸந்தவத்ஹ்ருத்ய ஹ்ரதித: ஸ்தம்போடணவாநு ॥"

என்று புகழ்ந்ததில் உச்சி மகிழ்ந்துபோய், தான் பிறப்பிக்கப்பட்டு மிக்க பலம் கொடுக்கப்பட்டு வளர்ந்ததெல்லாம் ப்ரஹ்மாவின் கட்டளைப்படி தன் தகப்பன் இந்த்ரனுக்கும் ராமனுக்குமாக என்பதையும், தான் ராமன் வானர ஸேனையில் ஸேனைத் தலைவனாக லங்கைமீது படையெடுக்கவேணுமென்ற தேவர் கட்டளையையும் மறந்து தோற்கடிக்கப்பட்டு, பெட்டிப் பாம்பாக அடக்கப்பட்ட ராவணனோடு அக்நி ஸாக்ஷிகமாக 'தாரங்கள், புத்ரர்கள், நகரம், ராஜ்யம், போகாதிகள், எல்லாம் நம் இருவருக்கும் தீர்க்க காலம் பொதுவே' என்று ஸத்ய ப்ரதிஜ்ஞை செய்துகொண்டு, இவன் பிறப்புக்கும் பலத்திற்கும் மூலமான இவன் தகப்பன்

சத்ருவோடு இவன் பிறவி ஏற்பாட்டுக்கே விரோதமாகவும், ராம ஸேநாநாயகப் பணிக்கு த்ரோஹமாகவும், இவனிடத்தில் வைத்த நம்பிக்கைக்கு த்ரோஹமாகவும், இவன் இந்த்ர ராம சத்ருவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டான்.

“யஷி௨தஸூ கூ தஸூ வி ஹ தா வாவகவஸ்ஷியள”

என்று ருஷி இவ்விடத்தில் தம்முடைய விஸ்வமயத்தைக் காட்டுகிறார். தோற்றவனோடு ஏன் இப்படித் தன் பிறவி ஏற்பாட்டுக்கே விரோதமாக ஒப்பந்தம் செய்யவேணும்? ப்ராதாவான ஸுக்ரீவன் விரட்டிவிடப் போகிறவன்; அவன் தன் ஜந்ம சத்ருவோடு பித்ரு சத்ருவோடு ப்ராதாவானானே யென்று ருஷியின் ஆச்சர்யம்.

ஸீதையை ராவணன் அபஹரித்தது பஞ்சவடியிலிருந்து. அது பம்பா ஸரஸ்ஸுக்கும் கிஷ்கிந்தைக்கும் ஸமீபம். அந்த வழியாகத்தான் ராவணன் ஸீதையை ஆகாய மார்க்கமாய்க் கொண்டுபோனது. அதற்குத் தக்கபடி தேவர்களால் முன்பே கிஷ்கிந்தையில் வாநர ஸைந்யம் அமைக்கப்பட்டது. ஸேனைத் தலைவனாகிய வாலி, எதிரியோடு அக்நி ஸாக்ஷ்யமாக ஒப்பந்தம் செய்துவிட்டான். அதன் பேரில் தேவர்கள் முன் செய்த ஏற்பாட்டில் ஸேனைத் தலைவனைப்பற்றி மாறுதல் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் வந்தது. இதோடிராமல், வாலி ஸுக்ரீவனுக்கு ப்ரபல சத்ருவாகி, அவனைக் கொன்றுவிடக் கங்கணம் கட்டிக்கொண்டு விட்டான். மதங்கமுநி சாபத்தால் வாலி மதங்காச்ரமத்தில் நுழையக்கூடாமற் போனதையிட்டு, ஸுக்ரீவன் அந்த ஆச்ரமத்திற்குள் வஸிக்க வேண்டி வந்தது. வெளியில் வந்தால் வாலி பிடித்துக்கொள்வான். ராம ராவண யுத்தத்தில் ராம ஸஹாயத்திற்காகத் தேவர்கள் பிறப்பித்த தேவாம்சமான வாநர ஸேனையில், முக்யத் தலைவனுக்கும் அடுத்த தலைவனுக்கும் பழி ஏற்பட்டுவிட்டது. வாலி செய்த குற்றத்திற்குச் சிரச் சேதம் தான் ராணுவ முறையிலும் தண்டனை. பிறவி முதல் நடந்த ஆதி ஏற்பாட்டையும், ப்ரஹ்மதேவன் இந்த்ரன் முதலியவருடைய ஆஜ்ஞையை மீறினதாலும், ராம ஸஹாயத்திற்காக நம்பிக்கையாகக் கொடுத்த பலத்தை அதற்காக உபயோகப்படுத்தாததுமன்றி அடுத்த ஸேனைத் தலைவனான ஸுக்ரீவனைக் கொல்ல உபயோகப்படுத்துவதாலும், அவனுக்கு வதமே தண்டனையாகும். இப்படி த்ரோஹம் செய்யும் ஸேனைத் தலைவனைச் சுட்டு விடுவார்கள். அவனோடு யுத்தம் செய்ய யாதொரு அவச்யமும் இல்லை. ராணுவப் பணிக் குற்றத்திற்கு ராணுவ முறையில் தண்டனை. ‘ஸமயம் ஆவிருளகிகம் ஸவிஜ்ஞாய’ என்று ராமன் பதில்; முதல் ச்லோகத்திலேயே இதையெல்லாம் ஸூசித்துளது. ‘ஸமயம்’ என்பது ஏற்பாடு, ஒப்பந்தம், வ்யவஸ்தை. பிறப்பிலேயே இந்த ராணுவப் பணி அமர்த்திய ஸமயம். தேவர்கள் பணியில் அமர்ந்தவர்கள் வாலியும் ராமனும். இருவரும் தேவர்கள். பிதாவான இந்த்ரனுடைய மநோரதத்திற்கும் கட்டளைக்கும் வாலி அத்யந்தம் த்ரோஹியானான். ‘நிதெபெமிர தஃவித ஃ’ என்று ராமனைத் தாரை வர்ணிப்பதால், வாலி தன் தகப்பன் கட்டளையை மீறு

வதை வாலிக்கு ஸூசிக்கிருள். ராமன் ஸமாதாந ச்லோகங்களில், 'நவயம் பவதோபக்ருதா:' என்று கூறியிருப்பது, "நாம் இருவரும் தேவர்கள் பணியில் அமர்ந்து அவர்களுக்கு ஊழியம் செய்யவே பிறந்தவர். உன் தகப்பன் உட்பட எல்லாத் தேவர்களுக்கும் நீ த்ரோஹம் செய்வதால், உன்னை வதம் செய்து ஸுக்ரீவனை வாநர ஸேனாநாயகனுக வைத்துக்கொண்டு மேல்கார்யம் நடத்தவேண்டு மென்று தேவர்கள் இப்பொழுது திட்டம் செய்திருப்பது. ப்ரஹ்மேந்த்ராதி தேவர்கள் கட்டளைப்படி நான் உன்னைக் கொன்று ஸுக்ரீவனை வாநர ஸேனாபதியாக ஏற்படுத்திக்கொண்டு, ஸீதாந்வேஷணமும் லங்கைப் படையெடுப்பையும் நடத்தவேணும். தேவர்கள் கட்டளையை நான் நிறைவேற்றுகிறேன். உன்னுடைய வதம் உன் தகப்பனர் ஏற்பாடு" என்ற கருத்தைக் கொண்டது. வாலி ராவண ஸக்யத்தை ப்ரதிஜ்ஞை செய்துவிட்டதாலும், தனக்கு அடுத்த ஸேனைத் தலைவனுன ஸுக்ரீவனை மதங்காச்ரமத்திற்கு வெளியில் வந்தால் கொல்வதற்குப் பத்த கங்கணனு யிருப்பதாலும், வாநரப் படைகள் வாலி வச மிருப்பதாலும், வாலியைக் கொல்லாமல் ஸீதாந்வேஷணம் செய்வதே ஸாத்ய மல்லாம லிருப்பதாலும், ராமன் வாலியைத் தள்ளிவிட்டு ஸுக்ரீவனோடுதான் அக்நி ஸாக்ஷ்யமாக ஸக்யம் செய்துகொள்ளவேணு மென்றும், அதைத் தவிர வேறு கதியில்லை யென்றும், மரக்கட்டைச் சிதையைக் கொளுத்தின பிறகு திவ்ய ஜ்ஞாநம் பிறந்த கபந்தன் தெளிவாக ராமனுக்குத் தெரியப்படுத்தினன். அவன் சொன்னது தேவர்களின் தீர்மாநம். வாலியைக் கொல்லாமல் ஸுக்ரீவ ஸக்யம் யாதொரு பயனும் படாது. ராவணன் ஸீதாபஹாரம் பண்ணிப் போனது கிஷ்கிந்தை வழியாய் ஆகாய மார்க்கத்தில். இது ஸுக்ரீவாதி வாநரர்களுக்குத் தெரியும். ஜடாயுவுடன் யுத்தம் நடந்தது வாலிக்கும் தெரிந்திருக்கவேணும். ராமன் பம்பா ஸரஸ்ஸுக்கு வந்தது வாலிக்கு நன்ருய்த் தெரியும். துந்துபியின் மலைபோன்ற அஸ்திக் குவியலைப் பத்து யோஜனை உதைத்துத் தள்ளினதும், கிஷ்கிந்தை எல்லையிலுள்ள ஸப்த ஸால வ்ருக்ஷங்களைத் தநுஷ்டங்காரத்தோடு துளைத்ததும் வாலிக்குத் தெரிந்ததே. தாரையும், ராம ஸஹாயம் ஸுக்ரீவனுக்கு இருப்பதையும், ராமனுடன் ஸ்நேஹமாய் ஸுக்ரீவனோடு ஒத்து ஸ்நேஹம் செய்துகொள்ளும்படியும் ஹிதம் சொன்னுள். இரண்டு ப்ராதாக்களும் சேர்ந்து ப்ரஹ்மேந்த்ராதி தேவர்களின் ஆதி ஏற்பாட்டுப்படி ஸீதாந்வேஷணுதி கைங்கர்ய ராஜ்யத்தில் கூடப் பணி செய்யவேணு மென்பது தாரையின் ஆசை. "நாம் இருவரும் ராம கைங்கர்ய ஸுகத்தை அநுபவிக்கக் கொடுத்துவைக்க வில்லையே!" என்ற அநுதாபத்தை வாலி பின்னல் "யே ப்ரவ்ருத்தம் ஹிதம் தாத நஃஸ்நேஹஸௌஹ்ருதயோ:" என்ற ச்லோகத்தால் ஸுக்ரீவனுக்கு ஸூசிக்கிருன். தான் செய்யக் கடமைப்பட்ட ராம கைங்கர்யத்தைத் தன் ஸ்தாநத்தில் தன் ஆத்மாவான அங்கதனைப் பூர்த்தி செய்யும்படி வாலி நியமிக்கிருன். ராமன் கிஷ்கிந்தா ஸமீபம் வந்ததும், தான் ஏமாந்துபோய் ராவணனுக்கு ப்ரதிஜ்ஞை செய்ததையும், அந்த ஸத்யத்தைத் தான் மீற முடியாமையையும், ராமனுக்கு ஸத்ய ப்ரதிஜ்ஞையால் தன் தகப்பன் முதலியவர்களுக்கு த்ரோஹமும், தன் ஸேனாதிபதி முறைக்கே த்ரோஹமும் செய்துவிட்டதை நினைத்து வெட்கப்பட்டு, ராம கைங்கர்யத்திற்கென்றே ஸ்ருஷ்டிக்கப்பட்ட தன்

தேஹம் அதற்கு உபயோகப்படாமல் வீணனதால், தன் தேஹத்தையே வெறுத்துக்கொண்டு, தன் குற்றத்திற்குத் தக்கபடி தாரகமான ராம நாமாங்கித ராம பாணம் நெஞ்சில் புகுந்து தேஹத்தை விட்டு ராமாநுக்ரஹத்தால் மோக்ஷம் பெறலாமென்று தீர்மானித்துவிட்டா னென்று நினைக்க வெகு காரணங்கள் உண்டு.

“ ஸ்வத்ரோஹம் வயஸாகாங்க்ஷந் வாயஸேநாவிதாரயா ।
ஸுக்ரீவேண ஸஹ ப்ராத்ரா ப்ராப்ய ஸங்க்யமுதாரத: ॥ ”

என்று தானே இதை நேரில் ஸ்பஷ்டமாக ராமனிடம் சொல்கிறன். வாலி ஓர் உத்தம ஜீவன்; இந்த்ரன் புதல்வனுக ராம கைங்கர்யத்தில் தலைமைக்காக ஸ்ருஷ்டிக்கப்பட்ட உத்தமாதிகாரி. காயத்ரீ ஜபம் நான்கு ஸமுத்ரக் கரைகளிலும் செய்பவன். ஏதோ ராவண ஸம்ஸர்க்கத்தாலும், அவன் தேஹ ஸம்பந்தத்தாலும், அவன் துதியில் மகிழ்ச்சியினுலும், அனவது புத்தி மயங்கி விபரீதத்தில் சென்று விட்டது. அவனுக்கு ருமா ஸம்ஸர்க்கம் முதலிய பாபம் ஏற்பட்டதற்கெல்லாம் ப்ராயச்சித்தமாக வத தண்டனைசெய்து அவனைச் சுத்தமாக்கி, அவனுக்கு மோக்ஷ ஸாம்ராஜ்யம் அளித்துவிடவேண்டு மென்பது ராமன் தீர்மானம். அவனை முடித்து விட்டு ஸுக்ரீவனைத் தலைவனுகக்கொண்டு மேல்கார்யம் நடக்கவேண்டு மென்று வாலி பிதாவான இந்த்ரன் தீர்மானம். ‘ஸ்வத்ரோஹம்’ என்பதில், ‘த்ரோஹம்’ என்னும் பதத்தால், ராவணனேடு ஒப்பந்தம் செய்துவிட்டதால் ப்ரஹ்மேந்த்ராதி தேவர்களுக்கும் ராணுவ ஸேநாபதி பதவிக்கும் நேர்விரோதமாகச் செய்த த்ரோஹத்தையும் ஸ்வாமி வ்யஞ்ஜநம் செய்கிறர். வாலி கர்த்ருக பஹுவித குரு த்ரோஹம் ஸ்பஷ்டமாயிருக்க, வாலி கர்மக த்ரோஹத்திற்கு இடமே யில்லையென்று வ்யஞ்ஜநம். வத தண்ட மில்லாமல் அவன் பாபத்திற்கும் வேறு ப்ராயச்சித்த மில்லை; அவன் பாபம் தண்டனையால் கழியாமல், அவன் மோக்ஷம் பெறுவது உசிதமில்லை; அவன் தேஹத்தின் ஸத்தை அவன் மோக்ஷத்திற்கு ப்ரதிபந்தகம்; அதை நீக்கி அவனுக்கு மோக்ஷதாநோபகாரம். அவன் ஒருவன் போனதும், முதல் ஏற்பாட்டின்படியே மற்றெல்லோரும் ராம கைங்கர்யத்தை நிறைவேற்றினர்கள். அவன் ஸ்தாநத்தில் ஸுக்ரீவன் தலைமையில் அமர்ந்தான். ஆதி ஏற்பாட்டில் அதைத் தவிர வேறு மாறுதலே கிடையாது. கிஷ்கிந்தா ராஜ்யத்திலும் அதைத் தவிர வேறு மாறுதல் கிடையாது. இதைக் காளிதாஸரும் “ யதாஸ்வம் நாஜஹாச்சேஷம் ஸுக்ரீவம் ஸந்யவேஶயத் ” என்று கூறினர்.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீ தேசிகன் வரைந்த சித்திரம்

[சிறுங்கட்டூர் ஸ்ரீ. உப. S. N. ஸ்ரீராமதேசிக சிரோமணி,
S. V. O. இன்ஸ்டிட்யூட், திருப்பதி.]

கலைகளுள் சித்திரக் கலை யென்பது மிகச் சிறந்தது. இக்கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் இன்றைக்கும் இருந்துவருகிறார்கள். நமக்கு மனத்தில் பல விஷயங்கள் ஸுலபமாய்த் தோன்றிவிடக்கூடும். ஆனால் அவைகளைப் பிறர் அறியுமாறு வெளியிடுவ தென்பதுதான் மிகச் சிரமமான கார்யம். அறிந்த விஷயங்களைத் தெளிவாகச் சப்தங்களால் ஒருவாறு தெரிவித்தாலும் தெரிவிக்கலாம். அதையே சித்திரம் எழுதிப் பிறரை த்ருப்திசெய்வது மிகக் கடினம். எதைப் பற்றிச் சித்திரம் எழுத எண்ணுகிறோமோ, அவ்விஷயம் முதலில் மனத்தில் சிறிதும் கலக்கமின்றிக் கண்ணாடியில்போல் பதியவேண்டும். அப்பொழுதுதான் அவ்விஷயம் சித்திரத்தில் நன்கு அமையக்கூடும். இப்படிப்பட்ட மிகச் சிரமஸாத்யமான சித்திரக் கலையில் வ்யாஸ வால்மீகி முதலிய ரிஷிகளும் கைதேர்ந்தவர்கள் என்பது, அவர்கள் இயற்றிய நூல்களால் இனிது புலப்படும். ஸகல சாஸ்த்ரங்களையும் கற்றுத் தேர்ச்சிபெற்ற ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரனான ஸ்ரீதேசிகனுக்கும், இக்கலையைப் பயின்று சித்திரம் எழுதவேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. எந்த விஷயத்தைச் சித்திரமாக எழுதலாம் என்று யோசித்துப் பார்த்தார். உடனே, ஸ்வாமியின் திருவுள்ளத்தில் விபவாவதாரங்களுள் கண்ணபிரானின் லீலைகளும், அர்ச்சாவதாரங்களுள் திருவேங்கடமுடையான் லீலைகளுமே நினைவுக்கு வந்தன. கண்ணபிரான் கோகுலத்தில் கோபர்களுடன் கூடிச் செய்த விளையாட்டுகளும், திருவேங்கடமுடையான் தனது ப்ரியதமையான தயாதேவியோடு கூடிச்செய்த லீலைகளும், ஸ்வாமியின் திருவுள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. ஆனந்தம் தாங்கவில்லை. இவைகள் தமது கண்கள் முன் நடப்பனவாகப் பாவித்து ஆநந்த பாஷ்பம் சொரிகிறார். ஆ! தேசிக வள்ளலின் பகவதநுபவம் தான் என்னே! 'இனி இவைகளைச் சித்திரமாக எழுதினால் தான் நம்முடைய மனம் சற்று நிம்மதியடையும்' என்று கருதி, கண்ணபிரானின் லீலைகளைக் கோபால விம்சதி என்னும் ஸ்தோத்ரத்தால் இருபது சித்திரங்களாகவும், திருவேங்கடமுடையானுக்கும் தயாதேவிக்கும் நடந்த லீலைகளைத் தயா சதகம் என்று நூறு ச்லோகங்களால் சித்திரங்களாகவும் வரைந்துள்ளார். முதலில் தயா சதகத்திலுள்ள சில சித்திரங்களை எழுதுவோம். இச்சதகத்தில் கண்ணைக் கவரும் சில அபூர்வ சித்திரங்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்யமான சில சித்திரங்களையே இங்கு வரைகின்றேன்.

முதலாவது சித்திரம்

[ஹவிர்தாரணதக்ஷம்]

இடம்:—ஸ்ரீவைகுண்டம். பரமன் ரத்ந மண்டபத்தில் ஓர் ஆஸநத்தில் அமர்ந்திருக்கிறான். சுற்றிலும் ஜ்ஞாநம், பலம், சக்தி, வீர்யம் முதலிய பகவத் குணங்கள் மூர்த்தங்களாய் வீற்றிருக்கின்றன. பரம பாபியான ஓர் ஜீவன் ஆசார்யனை முன்னிட்டு இருகரமும் கூப்பித் தன்னைக் காக்குமாறு பகவானைச் சரண் அடைகிறான். பக்ஷபாதம் இன்றி அவர்கள் கர்மாநுகுணமாகப் பலனை யளிக்கவல்லவனான பரமன், இவனைப் பரமபாபி யென்று அங்கீகரிக்க மறுக்கிறான். ஜ்ஞாநம் பலம் முதலியவைகளும் அவன் விருப்பப்படி இச்சீவனைக் குற்றவாளி யென்று கருதி, இவனை ரக்ஷிக்கக்கூடாதென்று கூறித் தமது வாதத்தை முடித்துக்கொண்டன. எப்பொழுதும் ஜீவன்களுக்கு ந்யாய வாதியாக (வக்கீலாக) இருந்து வாதம் செய்துவரும் தயாபிராட்டி இவனிடம் கருணைகொண்டு மிகவும் பரபரப்போடு ஆஸநத்திலிருந்து எழுகின்றாள். இச்செயலைக் கண்டு ஜ்ஞாநம் பலம் முதலியவைகள் தமது பக்ஷம் விழுந்துவிடும் என்று கருதுகின்றன. "நாதா! இந்த ஜீவன் பரமபாபி என்றே ஒத்துக்கொள்ளுகிறேன். இவன் செய்த பாபங்கள் கணக்கிட முடியாதவையே. இவைகள் எத்தனை பிறவிகள் எடுத்தும் எத்தகைய ப்ராயச்சித்தங்களினாலும் ஒழிக்கவொண்ணாதவை தான். எனினும் இவனைக் காப்பாற்றத்தான் வேண்டும்" என்று சொல்லி, தயாதேவி தன் வாதத்தை முடித்துக்கொள்ளுகிறாள். நீதிபதியாக அமர்ந்திருக்கும் பரமன் தயையின் வாதமே சிறந்ததெனக் கருதி, அதனைத் தட்ட முடியாது அவனை அங்கீகரிக்கிறான். இங்கு, பரமனை நீதிபதியாகவும் தயையை வக்கீலாகவும் வைத்துச் சித்திரம் வரைகிறார் தேசிக குரு.

இரண்டாவது சித்திரம்

[ஸ்வதாரண விசேஷ:]

இடம்:— நந்தநவநம். பரமனும் தயாதேவியும் உல்லாஸமாய்ப் பேசிக்கொண்டு செல்லுகிறார்கள். நடுவழியில், அலங்கோலமாக ஓடிவந்து ஒரு ஜீவன் தன்னைக் காப்பாற்றவேண்டிப் பரமனின் திருவடிகளைச் சரணடைகிறான். இவன் செய்த பாபங்களை யறிந்த பரமன் அவனை மறுக்கிறான். இது தயாதேவியின் மனத்திற்கு வருத்தத்தை யளித்தது. எல்லா ஜீவன்களும் ஸமமாக நித்யாநந்தத்தை அநுபவிக்கவேண்டு மென்பதே அவளுடைய ஆவல். "இவன் எவ்வளவு பாபம் வேண்டுமானாலும் செய்திருக்கட்டும். சரணடைந்த பிறகு இவனைக் கைவிட்டால் 'சொன்ன சொல்லை மறந்தவன்' என்று உங்களை உலகம் பழிக்கும். எப்படியாவது இவனைக் காப்பாற்றித்தான் ஆகவேண்டும்" என்று தயாதேவி பிடிவாதம் செய்கிறாள். "அப்படியாகில் இவன் செய்த தீவினையின் பயனாக இவன் எவ்வளவோ பிறவிகள் எடுக்கவேண்டுமே. அவைகளை யார் எடுத்துக் கழிப்பது?" என்கிறான் பரமன். 'சரணடைந்தவர்களைக் கைவிடமாட்டேன்' என்று அன்று கூறின வார்த்தையைக் காக்க, தாங்களேதான் பல பிறவி

களை எடுத்து அவனுடைய பாபங்களைக் கழிக்கவேண்டும். அதற்கு யார் என்ன செய்வது?" என்ருள். பாவம்! பரமனும் மத்ஸ்ய கூர்மாதி பல அவதாரங்களை எடுத்துப் படாத பாடுகளைப் பட்டு அவனைக் காப்பாற்றுகிருன். இதை இங்கு வெகு அழகாகச் சித்தரித்திருக்கிருர் நம் தேசிக வள்ளல்.

210142
சென்னை-600 008.

மூன்ருவது சித்திரம்

[வ்ருஷகிரிஸவிஶேஷ:]

இடம்:— திருமலைச் சாரல். அழகிய தென்றல். பெரிய பிராட்டி தயா பிராட்டிகளுடன் பகவான் சோலைகளின் இயற்கையழகை அநுபவித்துச் செல்லுகிருன். வழியில் ஓர் ஜீவன் நினைவு தப்பி மரணத் தறுவாயில் படுத்துக் கிடக்கிருன். இவனைச் சற்றும் கவனியாமல் ஸர்வேச்வரன் பேசிக்கொண்டே செல்லுகிருன். தயை மிகப் பரபரப்புடன், "ஓர் ஜீவன் இங்குத் தவிக்கும் போது அவனைச் சற்றும் கவனிக்காது செல்வது தங்களுக்கு ந்யாயம் தானு?" என்கிருள். "ஆம், இருக்கட்டும். என்ன செய்வது? நம்மைச் சரணமடைந் தால், அவர்களைக் காப்பாற்றவேண்டும்" என்கிருன் ஸர்வேச்வரன். "இவன் நம்மைச் சரணமடையாவிட்டால் என்ன முழுகிவிட்டது? கேவலம் விஷயவாஸத் தால் எவ்வளவு பேர்கள் நற்கதி யடையவில்லை? அப்படியே பவித்ரமான இத் திருமலையில் வஸித்துவந்தபடியால் இவனுக்கும் நற்கதி யளித்தாகவேண்டும்." என்று தயாதேவி வற்புறுத்திச் சொல்லப் பகவானும் ஏற்றுக்கொள்ளுகிருன். இங்குத் தயாதேவியின் இவ்விசித்ர செயலைக் கண்டு மனம் பூரித்து ஸ்ரீ தேசிகவள்ளல் எழுதிய சித்திரத்தின் அழகை என்னென்போம்?

நான்காவது சித்திரம்

இடம்:— அந்தப்புரம். அங்கு ஓர் அழகான பர்யங்கம். அதில் பரமன் படுத்திருக்கிருன். ஸ்ரீதேவி, பூதேவி, தயாதேவி முதலிய தேவிமார்கள் எப்பொ ழுதும்போல் உபசரித்து வருகிருர்கள். தேஹாத்ம விவேகம் அற்று, குண லேசமு மில்லாத ஒரு ஜீவன் தன்னைக் காப்பாற்றவேண்டிச் சரணம் புகுகிருன். ஜ்ஞாந லேசமு மில்லாத இவனை ஏற்றுக்கொள்ளப் பகவானுக்கு விருப்பம் இல்லை. மற்ற தேவிமார்களும் இவ்வாறே கூறுகிருர்கள். தயாதேவி சிறிது கோபம் கொண் டவள்போல், "பாவம்! இவன் ஒன்றும் அறியாதவன். இவனைத் தாங்களே நிராகரித்தால் வேறு யார்தான் இவனுக்குக் கதி! இவனுக்கு ஜ்ஞாந மில்லாவிட் டால் என்ன? இவனை ஏற்றுக்கொள்ள இவன் செய்த சரணுகதி போதாதோ? ஜ்ஞாந லேசமு மின்றிக் கேவலம் சரணுகதியைக்கொண்டு பலர் முக்தி பெற் றிருக்க, இவன் மாத்ரம் என்ன பாவம் செய்தான்?" என்று சொல்லித் தனது கருத்துடன்கூடிய பார்வையுடன் ஒத்து நோக்குகிருள். இவளுடைய பார்வை களில் மதிமயங்கிப் பகவானும் அவ்வாறே செய்கிருன். இதை நேரில் கண்ட மற்ற தேவிமார்களுக்கு மனவருத்தம். "ஆ! தயாதேவி செய்த பாக்யம்தான் என்ன! நாமும் அவளைப்போல் பரமனுக்கு அந்தரங்கர்களாகப் பிறந்திருக்கக்

கூடாதா?'' என்று நொந்துகொள்கிறார்கள். இவ்வழகிய சித்திரத்தை எழுதிய தேசிகமணியின் பகவதநுபவத்தை என்னென்று உரைப்பது?

ஐந்தாவது சித்திரம்

இடம்:— பூஞ்சோலை. இங்குத் தயாதேவி மலர்களைப் பறித்துக்கொண்டிருக்கிறாள். ஸர்வேச்வரன் எங்கும் அவளைக் காணாமல் அலைந்து வருந்தி இருப்பிடம் வந்து, பிறர் அறியாதபடி சிறிதும் நடைசப்த மின்றி இவளுடைய பின்புறம் தோன்றி நிற்கிறான். தயாதேவி கோபத்தால் பரமன் வந்ததை யறிந்தும் அறியாதவள்போலத் திரும்பாமல் இருந்தவண்ணமே நிற்கிறாள். பகவான் பலதடவைகள் கூப்பிடுகிறான். திரும்பவில்லை. எதிரே போய் நின்றான். முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறாள். கோப காரணம் என்னவென்று கேட்க, ''திருமலைச் சரிவில் கோர விபத்தில் கிடக்கும் ஒரு ஜீவன் தங்களைக் கதறிக் கூப்பிட்டு, ''ஸ்வாமிந்! பாஹி! என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று கதறுகிறான். இவனை நீங்கள் சிறிதும் கவனியாதிருப்பது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவனை ஏற்றுக்கொண்டால்தான் என் மனம் ஸந்தோஷம் அடையும்'' என்கிறாள். அவளுடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தில் ஆசைப்பட்டு அவ்வாறே செய்கிறான். தயாதேவியும் முகமலர்ந்து பரமனை நோக்குகிறாள். நம் உள்ளத்தைக் கவரும் இச்சித்ர அழகுதான் என்னே!

வர்ணங்களால் குறிப்பிட்ட கருத்தைப் படங்களாக எழுதுவதற்கே சித்திரம் எழுதுவது என்று பெயர். ''ஸ்வாமி தேசிகன் திருவேங்கடமுடையானுடைய லீலைகளைப் படங்களாக எழுதவில்லை; ச்லோகங்களாகவே செய்துள்ளார். இதற்குச் சித்திரம் என்பது எப்படிப் பொருந்தும்?'' என்று கேட்கக்கூடும். ஒருவன் கண்ணபிரான் யமுனைக் கரையில் கோபிகளுடன் கூடி விளையாடுவதைச் சித்திரமாக எழுதுகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அதை நாம் பார்க்கிறோம். அப்பொழுது நம் மனத்தில் என்ன தோன்றுகிறது? நாம் யமுனைக் கரையில் இருப்பதாகவும், நம் எதிரில் கண்ணன் விளையாடுவதாகவும், நாம் அவைகளைக் கண்முன் நடப்பதுபோல் பார்ப்பதாகவும் எண்ண முண்டாகிறதன்றோ? இது ஒவ்வொருவரும் அநுபவித்த விஷயம். இப்படிப்பட்ட எண்ணங்கள் உண்டாவதன்றோ சித்திரத்தைப் பார்ப்பதன் பலன். அப்படி இச்சுலோகங்களைப் படித்த மாத்ரத்தில் ரஸிகனுடைய ஒவ்வொருவனுடைய மனத்திலும், அவைகளில் கூறப்பட்ட பொருள்கள் நேரில் நடப்பனபோல் தோன்றும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, இவைகளையும் சித்ரம் என்று கூறுவதில் என்ன தவறு? இதுவும் ஒரு விசித்ர சித்ரமே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

அஹோபிலம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவங்க மாலை

[திருப்பூந்துருத்தி ஸ்ரீ. உப. V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B. A.]

---

1. திருவடி

பாரடங்க வோரடியா லளந்த பாதம்
  பங்கயத்தோன் மறைபாடிப் பணிந்த பாதம்
காரமருங் கற்பகமே கடுக்கும் பாதம்
  கங்கையெனுங் கடவுள்நதி கழுவும் பாதம்
சீரமருங் காளியன்மேற் செறிந்த பாதம்
  திருமகள்தன் கைவருடச் சிவந்த பாதம்
ஆரணங்கள் தேடுவன அடையாப் பாதம்
  அகோபிலத்தி லமர்ந்தபிரான் பாதந் தானே.

2. திருக்கால்கள்

சாம்பவனார் வலஞ்செய்து விசயஞ் சாற்றச்
  சதுமுகனார் நிலம்வரையில் தாவுங் காலும்
தேங்கதலித் தண்டெனவே சிறந்து யானை
  சிங்கம்போ லேற்றிணைப்போற் செல்லுங் காலும்
பாம்பரையன் பணமுடிமே லாடு மந்நாள்
  பதுமத்தின் தாள்போலச் செறிந்த காலும்
ஆம்பரிசங் கறிந்தவர்கள் அடையுங் காலும்
  அகோபிலத்தி லமர்ந்தபிரான் கால்கள் தாமே.

3. திருவுந்தி

காண்டகுநற் கமலவெழில் காட்டு முந்தி
  கடல்கலக்குங் கடுஞ்சுழல்போற் கவினு முந்தி
மாண்டகையோர் மாதேவன் முதல்தே வர்க்கும்
  மனிசர்க்கும் தாயகமா மலர்ந்த வுந்தி
பூண்டடிமை பொருந்துபவர் புகழ வெல்லாப்
  புவனியையுந் தன்னுள்ளே பொதிந்த வுந்தி
ஆண்டகையா மயனைமுன மளித்த வுந்தி
  அகோபிலத்தி லமர்ந்தபிரா னுந்தி தானே.

4. திருமார்பு

பொன்மாலை மணிமாலை புனைந்த மார்பும்
  பூமகளைத் தன்னகத்தே பூண்ட மார்பும்
சொன்மாலைத் துறவியரும் சுரருந் தந்தந்
  துதிமறந்து பெட்புறுமச் சோதி மார்பும்

கன்மாண்ட மணிக்கெல்லாந் தலையாங் கொற்றக்
கவுத்துபமா மணியாரங் கவினு மார்பும்
அன்பார வனுமனையன் றணைந்த மார்பும்
அகோபிலத்தி லமர்ந்தபிரான் மார்பு தானே.

5. திருக்கைகள்

வென்றிதரும் படையைந்து மேவுங் கையும்
விற்பிடித்து வஞ்சகரை வீட்டுங் கையும்
தன்றமரை யஞ்சாமல் தடுக்குங் கையும்
தனஞ்சயற்காக் குசைக்கயிறு தாங்குங் கையும்
அன்றசல மணிகுடையா வமைத்த கையும்
அடியவர்கட் கறமுதனுன் களித்த கையும்
அன்றிலென வலர்மகளை அணைந்த கையும்
அகோபிலத்தி லமர்ந்தபிரான் கைகள் தாமே.

6. திருக்கழுத்து

முத்தர்களும் முனிவர்களும் முறைமை கண்ட
மூதுவரும் முப்போதும் தொழுத கண்டம்
நித்திலமும் வனமாலை துளவுங் காசும்
நேயமுடன் கலந்தங்கு நிலவுங் கண்டம்
பத்தனுக்காப் பவளத்தூண் பயந்த வம்மான்
பகையழித்து வாகைத்தார் படுத்த கண்டம்
அத்திருதன் கைம்மலரா லணைந்த கண்டம்
அகோபிலத்தி லமர்ந்தபிரான் கண்டந் தானே.

7. திருவாய்மலர்

இன்புக்கோ ரெல்லையென இலகும் வாயும்
இணையடியைச் சார்ந்தவர்கட் கினித்த வாயும்
பொன்புகழென் றிவைவிரும்பார் போற்ற வெல்லாப்
புவனியையும் போனகஞ்செய் பூழி வாயும்
என்புடனர் யாக்கைநோ யிகந்த வாயும்
இந்திரையோ டின்னுரைசெய் திருக்கும் வாயும்
அன்பொழுக வடியாரை யழைக்கும் வாயும்
அகோபிலத்தி லமர்ந்தபிரான் வாய தாமே.

8. திருக்கண்கள்

கண்டவர்தம் வினைவிலக்கிக் காக்குங் கண்கள்
காதளவும் நீண்டரிகள் கலந்த கண்கள்
புண்டரிகப் புதுப்போது புரையுங் கண்கள்
புக்கிருதாள் போற்றவருள் பொழியுங் கண்கள்

மண்டிகழ மதிகதிராய் மன்னுங் கண்கள்
  மலரவள்செய் கட்குறிப்பின் மகிழ்ந்த கண்கள்
அண்டர்களுங் கடைநோக்குக் கவாவுங் கண்கள்
  அகோபிலத்தி லமர்ந்தபிரான் கண்கள் தாமே.

9. திருநெற்றி

வான்திகழும் மணிமவுலி செறிந்த நெற்றி
  மலர்ந்தொளிரு மரைமலர்போல் விளங்கும் நெற்றி
தான்திகழும் நறுங்குஞ்சி தவழும் நெற்றி
  தண்மதிபோ லமுதவொளி பரப்பும் நெற்றி
மான்மதத்தில் திலகஞ்செய் திலகும் நெற்றி
  மன்மதனார் கோயிலெனச் சிறக்கும் நெற்றி
ஆனிரைப்பின் கான்திரிந்த அயர்வு தீர
  அகோபிலத்தி லமர்ந்தபிரான் நெற்றி தானே.

10. நிகமநம்

பவநாசத் திருநதிவந் தலைக்கும் வென்றிப்
  பருப்பதத்தி லமர்ந்துறையு மடிகள் தம்மை
அவநாசி யடிமுதலா மேனி முற்று
  மபிடேகம் வரைக்கருதும் மாலை தந்தான்
தவராச ஸிலக்குமிமா நார சிங்க
  சடகோபன் தாமரைத்தாள் துகளாய் மன்னும்
கவிராசன் பூந்துருத்தி வரதன் மைந்தன்
  கண்ணபிரான் கழற்கணிந்து களிக்கு பாறே.

———[ஸ்ரீ:]———

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

பார்த்திவ ஸூ கார்த்திகை மீ

1௳ வெள்ளிக்கிழமை — ஸ்ரீ வைஷ்ணவ கைஶிக ஏகாதசி; வ்ருச்சிக சுக்ல த்வாதசி திதி; ஸங்க்ரமண தர்ப்பணம்.
4௳ திங்கட்கிழமை — பௌர்ணமி; ஸர்வாலய வைகாநஸ தீபம்; ஸ்ரீ திருமங்கை மன்னன் திருநக்ஷத்ரம்.
5௳ செவ்வாய்க்கிழமை — ஸ்ரீ பாஞ்சராத்ர தீபம், ஸ்ரீ திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்
7௳ வியாழக்கிழமை — க்ருஷ்ண த்ருதீயை திதி.
8௳ வெள்ளிக்கிழமை — க்ருஷ்ண சதுர்த்தி-பஞ்சமி திதி த்வயம்
13௳ புதன்கிழமை — க்ருஷ்ண தசமி திதி
14௳ வியாழக்கிழமை — அதிதி.
15௳ வெள்ளிக்கிழமை — க்ருஷ்ண ஏகாதசி திதி; ஸர்வ ஏகாதசி (வ்ரதம்)
19௳ செவ்வாய்க்கிழமை — ஸர்வ அமாவாஸ்யை
29௳ வெள்ளிக்கிழமை — வ்ருச்சிக சுக்ல தசமி திதி.

[குறிப்பு] வ்ருச்சிக (கார்த்திகை) மாஸத்தின் சுக்ல ஏகாதசி ஶ்ராத்தம், மார்கழி மீ 1௳ சனிக்கிழமை தினம் பண்ணப்படவேண்டும். அன்று குதப காலத்திற்குப் பிறகே அடுத்து வரும் [illegible] ஸங்க்ரமணம் ஸம்பவிக்கிறபடியால், [illegible] வ்ருச்சிக மாஸம் உண்டு என்பது தான் இதற்கு [illegible].

னன் அவள் ஆற்றலுக்குத் தோற்றுப்போய், "கூஜஷாஜிெந நஸைஜணுவயமூ வக்ஷஸ்ஸூஷாயுயாழ ।" என்றும், "முப்புரி நூலொடு மானுரி யிலங்கு மார்வினின்" என்றும், தனது வேடத்திற் கேற்ப அவளது விச்லேஷம் தாங்கமாட்டாது மார் தோலையிட்டு மூடிச் சென்றதாகச் சொல்லப்பட்டுள்ளது. இதனுல் ப்ரஹ்மசர் யாவஸ்தையிலும் உட்பட நித்ய யோகம் சொல்லப்பட்டது.

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், தொத்தலர்பூஞ் சுரிகுழற் கைகேசி சொல்லால் தொன்னகரந் துறந்து நெடுங்கானம் படரத் தொடங்குழி, பிராட்டியைப் பார்த்து,

" ... ... இன்று போய்க்
கருவி மாமழைக் கற்றடங் கண்டுநான்
வருவெ னீண்டு வருந்தலே நீ" யென்முன்.

[(ஒப்பற்ற என் தம்பி பரதன் பூமியைக் காப்பான்; தஞ்சமாகிய இரு முதுகுரவருடைய ஆஜ்ஞையும் தாங்கினவனுகி) உலகம் செழித்து நடத்தற்குக் கருவியாகிய பெரிய மேகங்கள் சூழ்ந்துள்ள வனத்தை இன்று அடைந்து, விரைவில் இங்கே வருவேன்; நீ வருந்த மடையாதே.] என்று கூற, பிராட்டி, தன் நாயகன் வனம் செல்லத் தொடங்கினுன் என்றேனும், ராஜ்யத்தை இழந்தான் என்றேனும் வருத்தங் கொள்ளாமல் 'நீ வருந்தலே யான் நீங்குவன்' என்று செவி சுடச் சொன்னதையே தான் நினைந்து நினைந்து வருந்த, பெருமாள் மீண்டும், "ஸீதே! முழுமதித் திருமுகத் தன்னமே! செம்பஞ்சு ஊட்டப் பெற்று அனிச்ச மலரினும் மெல்லிய உனது அடிகளில் பொருந்தார் கைவேல் நுதிபோல் பரல் பாயும்; மெல்லடிக்கள் குருதி சோரும்; அவை கொடுங்கதிரோன் துன்னு வெயில் வறுத்த வெம்பரலிலும் கற்களிலும் ஊன்றுதலைத் தாங்கமாட்டா; கடுமையுடைய கால்களே அவைகளைத் தாங்கவல்லவை; வெங்கானில் வெய்யோன் கிரணம் செய்யோன் கிரணம் போல் மிகச் சுடும்" என்று சொல்லி வரவொண்ணுது மறுக்க, பிராட்டி,

" பரிவி கந்த மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனே யூழி யருக்கனும்
எரியு மென்பது யாண்டைய தீண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்முள்."

[ஸ்வாமி! அடியேனிடத்து இரக்கமும் பற்றுமின்றித் தேவரீர் அடியேனை விட்டு நீங்கிச் செல்வதாக இருக்கின்றீர்; அடியேற்கு நேரும் பிரிவுத் துயர், 'ப்ரளய காலத்து ஸூர்யனும் நிகரல்லன்' என்னும்படி சுடுமே. இத்தகைய தேவரீரது பிரிவுத் துயரைவிடக் கானகம் சுடுந் தன்மையதோ? (அன்று)] என்று கூறிப் பெருமாளைப் பிரியமாட்டாது உடன் சென்முள். இதுகாறும் கூறியவாற்றுல் பகவானை விட்டுப் பிராட்டியும், பிராட்டியை விட்டுப் பகவானும் எக்காலத்தும்

எந்த அவஸ்தையிலும் தனித்து நிற்பதில்லை யென்னும் நித்யயோகம் சொல்லப் பட்டதாயிற்று. ஆகையால் ஒருவரை விட்டு ஒருவர் பிரியகில்லாத பெருமாளும் பிராட்டியும் சேர்ந்த மிதுநமே சேதநர்க்கு உத்தேச்யம். அன்றியும்: ஸ்ரீமந் நாரா யணனது க்ருபையே பிராட்டியாய் உருவெடுத்து, அவ்விருவரும் சேர்ந்து ஜகத் தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் முதலிய வ்யாபாரங்களைச் செய்கின்றன ரென்பது நமது ஸித்தாந்தம். இதனை ஸ்வாமி தேசிகன், “ஹே தெய்வ நாயகா! நின்னருளெனுஞ் சீரோ ரரிவை யானதென” என்று மும்மணிக் கோவையில் பணித்தார். பகவத் ஸாக்ஷாத்காரத்தை முதன் முதல் பெறற மயர்வற மதிநல மருளப்பெற்ற மஹதாஹ்வயர் எனும் பேயாழ்வார், தண் கோவல் இடைகழியில் ஆழிவண்ணனை அநுபவிக்குங்கால், திவ்யமங்கள விக்ரஹம், திவ்யாயுதங்கள், இவைகட்கு முந்தி மற்றெல்லாவற்றையும் விடப் பெருமாளுக்கு லக்ஷ்மியே அஸாதாரண சிந்ஹமா யிருத்தலை அநுஸந்தித்து, “ஆழிவண்ணன்பால் திருக் கண்டேன்” என்று அருளிச் செய்ததையும்; திருமழிசைப்பிரான்,

“கல்லாதவ ரிலங்கை கட்டழித்த காகுத்த
னல்லாலொரு தெய்வம் யானிலேன்—பொல்லாத
தேவரைத் தேவ ரல்லாரைத் திருவில்லாத்
தேவரைத் தேறேன்மின் தேவு.”

என்று உடன்பாட்டு முகத்தால் ‘சிலையினு லிலங்கை செற்ற தேவனே தேவனு வான்’ என்றும், எதிர்மறை முகத்தால் தேவரல்லாதாரின் இலக்கணத்தையும் அறுதியிட்டு அருளிச் செய்ததையும் ஆழ்ந்து நோக்கின், திருவிலியான தேவர் தேவராகார் என்பதும், திருப் பொலிந்த தேவனே பரதேவதை யென்பதும் அறியக் கிடக்கின்றன. மேலும், பகவானை நிர்த்தாரணம் பண்ணவந்த ச்ருதி, “ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ, அஹோராத்ரே பார்ஶ்வே” என்று அவனுக்கு அஸாதாரணமான ச்ரிய:பதித்வத்தையும் அவள் அவனுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணம் என்பதையும் உத்கோஷித்தது. “பிராட்டியினது திருவடியின் செம்பஞ்சுக் குழம்புகளால் அடையாளம் செய்யப்பட்டுப் பகவான் பூர்ணமான தேஜஸ்ஸுடன் விளங்குகின்றான்;” “மாமலர் மன்னிய மங்கை அவன் மார்பினில் மகிழ்ந் துறைவதால் அவன் துய்யனானான்” என்பவற்றை, “வர்ணம் தேஜ: ஶ்ரீரிதி ஹவதீவாத ஸாக்ஷாத்ஸாங்கழ”, “துய்யனு நீயே செய்யா ளுறைதலின்” என்று முறையே நம் பரமாசார்யனான ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் பிராட்டியின் ப்ராதாந்யம் விளங்க அநுக்ரஹித்துப் போந்தார்.

இனி ஸ்ரீ என்னும் பதத்தின் பொருளை ஆராய்வோம். “ஸ்ரீ சப்தம் 1. ஶ்ரீயதே ; 2. ஶ்ரயதே ; 3. ஶ்ருணோதி; 4. ஶ்ராவயதி ; 5. ஶ்ருணாதி ;6. ஶ்ரீணாதி என்று ஆறுபடியாகப் பகவச் சாஸ்த்ரங்களிலே நிர்வசநம் பண்ணப்பட்டிருக் கும்.” இவை முறையே 1.(சேதநர்களால்) ஆச்ரயிக்கப்படுகிறாள்; 2.(பக வானை) ஆச்ரயிக்கிறாள்; 3.(சேதநர் உரைகளைக்) கேட்கிறாள்; 4.(பகவானைக்)

கேட்பிக்கிருள், 5. எல்லாத் தோஷங்களேயும் போக்கடிக்கிருள்; [அநிஷ்ட நிவ்ருத்தி]; 6. குணங்களால் ஜகத்தைப் பூர்ணமாகப் பண்ணுகிருள் [இஷ்ட ப்ராப்தி] என்று பொருள்படும்.

இவற்றின் விவரணங்களே ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் த்வயாதிகாரத்தில் பரக்க ஸாதித்திருக்கிருர். தவிர: மேற்கூறிய அர்த்தங்களுள் சிலவற்றை,

"அருடரு மடியவர் பால்மெய்யை வைத்துத்
தெருடர நின்ற தெய்வநா யகநின்
அருளெனுஞ் சீரோ ரரிவையா னதென்
இருள்செக வெமக்கோ ரின்னெளி விளக்காய்
மணிவரை யன்ன நின்திரு வுருவில்
அணியம ராகத் தலங்கலா யிலங்கி
நின்படிக் கெல்லாந் தன்படி யேற்க
அன்புட னின்னே டவதரித் தருளி
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து
ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று
தன்னடி சேர்ந்த தமருனை யணுக
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் திருவே."

என்னும் தமது மும்மணிக் கோவைப் பாசுரத்தில் விளங்க வைத்தார். "பெருமாளின் அருட் சீரே பிராட்டி யென்றும், அவள் அவனது மணிவரை யன்ன மணிமார்பில் அலங்கல்போல் மகிழ்ந் துறைபவ ளென்றும், அவனது திவ்யாவதாரங்களுக் கேற்ப இவளும் அன்போடு அவதரிப்பவ ளென்றும், அவள் எம்பெருமானுடன் அநவரதம் இருந்துகொண்டு அபராதம் செய்கிற சேதநரைப் பகவானிடத்தில் அபிமுகராகப் பண்ணி, அவரவர் கர்மத்துக்கு அநுகுணமாகப் பலம் கொடுக்கும் தண்டதரனை ஈச்வரனுடைய நிக்ரஹ ஶக்தியை நிவ்ருத்தித்து, சேதநர்கள் ஆச்ரயிக்கும் வேளேயில் தானும் உடனிருந்து பல ப்ரதானம் செய்கிருள்" என்றும் இப்பாசுரத்தில் சொல்லப்படுகிறது. "ப்ரஹ்லாத விஷயத்தில் ப்ரேமாதிஶயத்தாலே ப்ரதிகூல விஷயத்தில் பிறந்த சீற்றத்தின் கனத்தைக் கண்டு அணுக அஞ்சின ப்ரம்ஹாதிகள் இவளே ஶரணமாகப் பற்றி, இவள் முன்னிலேயாக ஸ்ரீ ந்ருஸிம்ஹ ரூபனை ஸர்வேச்வரனைக் கிட்டி ஸ்தோத்ரம் பண்ணினர்கள்" என்பது புராண ப்ரஸித்தம். ஆதலின் ஸஹதர்மசாரிணியான ஸ்ரீயாலே விஶிஷ்டனாய்க் கொண்டு, ஶரண்யன் ஸர்வ ஸ்வதந்த்ரனாய்த் தன்னே யடைந்த சேதநரை உஜ்ஜீவிக்கச் செய்கிருனென்பது இவைகளின்று போந்த பொருள்.

"ஸ்வஸ்யாஶ்சைவ ஸ நஸ்யேஹ தஸ்ய ஆஸ்யாம் ஷுதிஷுதி" என்று அவளுக்கு இவன் ப்ரியனும் இவனுக்கு அவள் ப்ரியையாயும், இப்படி திவ்ய தம்பதிகள் இருவரும் ஐகரஸ்யத்தை அடைந்திருப்பர். மேலும் அவனுடைய மணிமார்பை 'அகலகில்லேன்' என்று அநுராகாதிஶயத்தாலே அவள் இருப்பிட

மாகக் கொண்டாற்போல, இவனும், "பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு" என்றும், "மலராள் தனத்துள்ளான்" என்றும் பிச்சேறிப் போய் அவளுடைய ஸ்தநத்தை அநுராகாதிஶயத்தாலே இருப்பிடமாகக் கொண்டான். சேதநோஜ்ஜீவந விஷயத்தில் „வாவா நா.வா..............நகஶ்சிந்நாபராத்யதி", „உக்ஷயா ஶீஹதி–பவழுறா:" என்று இவள் சொன்னால் அவன், "என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்பான். பின்னும் ஶரணாகதனான ஸ்ரீவிபீஷணாழ்வானிடத்தில் அதிஶங்கித்த மஹாராஜரைப் பெருமாள் கபோதோபாக்யாநத்தைச் சொல்லித் திருத்தினதுபோல, பிராட்டியும் ஆர்த்ராபராதிகளான ராக்ஷஸிகளை ஶிக்ஷிக்கத் தொடங்கின திருவடியை ருக்ஷ-வ்யாக்ரோபாக்யாநத்தைச் சொல்லித் திருத்தினாள். இப்படி இருவருக்கும் ஆச்ரித விஷயத்தில் போட்டி போட்டுக்கொண்டு ஏற்றத் தாழ்வின்றிக் கன்னலும் அமுதும்போல் ஒத்து, அருட் பெருக்கு வெள்ளமிட்டு ஓடிக்கொண்டிருக்கும். "..................... பெருந்தேவியே! உன் பதியான மாயனவன் அனவரதமுன் மழைமதர்க் கண்ணேவு தொழில் செய்ய" என்றபடி, அவள் தன் அருட்கண்ணால் ஏவின தொழிலை அவன் செய்து முடிப்பன். [அதாவது: எங்கே லக்ஷ்மீ கடாக்ஷமுண்டாகுமோ அங்கே பகவத் கடாக்ஷம் ஸித்தம் என்றபடி.] இவள் திரு; அவன் திருவுக்கும் திருவாகிய செல்வன். இவள் தன்னை நலியச் செய்தோரிடத்தும் குற்றம் பாராது க்ருபை பண்ணும் நித்யம் அஜ்ஞாத நிக்ரஹை. இதனை ஒரு சிறு த்ருஷ்டாந்தத்தால் ஸ்பஷ்டமாகக் காணலாம். காகனும் ராவணனும் ஏகரீதியான அபசாரத்தைப் பிராட்டியினிடம் பட்டிருக்கச் செய்தேயும், பிராட்டியின் ஸாந்நித்யத்தால் காகன் உய்ந்தான்; அவள் ஸாந்நித்யம் இன்மையால் ராவணன் மாண்டான். இதிலிருந்தும், ஸ்ரீ சப்தார்த்தத்தில் முதல் நான்கு பொருளால் புருஷகாரத்வமும், பின் இரண்டு பொருளால் உபாயத்வமும் பிராட்டிக்கு உண்டென்பதும் ஸுவ்யக்தம். ஆகவே: இவை போன்ற அஸங்க்யேய கல்யாண குணங்கள் நிறைந்த நித்யாநபாயிநியான இவ்வின்னமுதத் திருமகளை முன்னிட்டு எம்பெருமானைச் சரண மடையவேண்டியது ஒவ்வொரு சேதநனுக்கும் ப்ராப்தம்.

"வேரி மாருத பூமே லிருப்பாள் வினை தீர்க்கும்"

ஸ்ரீ:

1927-ம் வருஷத்து இரண்டாவது ஹிந்துமத எண்டௌ மெண்ட் ஆக்டில் செய்யப்போவதாயிருக்கும்

மாறுதல்கள் மசோதா

[மறுப்பு மஹஜர்]

இப்பொழுது நடைபெற்றுவரும் அட்வைஸரி கவர்ன்மெண்டாரால் மஹா ஜனங்களுடைய அபிப்ராயத்தைத் தெரிந்துக்கொள்ள வேண்டி, புதிய பில் ஒன்று, சென்னை போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் 1944-ம்-ஞு-த்திய 5-வது ஆக்ட் ஏற்ப டுத்தினபொழுது, அந்த ஆக்டில் கூறியுள்ள விஷயங்கள், ஒருவருக்கும் ஆக்ஷே பிக்கக் கூடியவையாக இருக்கக்கூடா வென்று முறையிட்டுக் கொண்டதன் பேரில், அந்த ஆக்டில் கணக்குப் பரிசோதனை ஸம்பந்தமாகச் சொல்லியுள்ள அம்சங்கள் எல்லாம் ஆக்ஷேபகரங்களாக இருக்கின்றன வென்னும் காரணத் தைக் கொண்டு, உடனே அவை விலக்கப்பட்டன.

இப்புதிய பில் விஷயமாக நாங்கள் மன்றாடிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால்:—

முதலாவது: இந்தப் புதிய பில் விஷயமாக மஹா ஜனங்களுடைய அபிப்ராயத்தைத் தெரிந்துகொள்வதற்குக் கொடுக்கப்பட்டுள்ள காலம் மிகவும் சொற்பமாக இருக்கிறது. பில்லில் சொல்லப்பட்டுள்ள மாறுதல்கள் பலவித முக்ய சர்ச்சைகளுக்கு இடமாயிருத்தலால், அவைகளை மஹா ஜனங்கள் நன்கு ஆராய்ந்து, அவற்றின் குணதோஷங்களைக் கவர்ன்மெண்டாருக்குச் சரிவர எடுத் துக் கூற நீண்ட காலம் பிடிக்கும். குணதோஷங்களைச் சரிவரத் தெரிவிப்பது அவஸரத்தில் இயலாத காரியம். 28-8-45-கெஜட்டில் மேற்கூறிய பில் வெளி யிடப் பட்டிருக்கிறது. 23-10-45-வரையில் மஹா ஜனங்களின் பரிசோதனைக் குக் கால வறையறை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கொடுக்கப்பட் டுள்ள காலம் இரண்டு மாஸத்துக்கும் குறைவாகவே இருக்கிறது. வரப்போ கும் மாறுதல்களால் உண்டாகும் பயனை அடைய இருக்கும் ஜனங்கள், இந்த இந்தியாவில் பல இடங்களிலும், அதிலும் இந்த ராஜதானியில் மூலை முடுக்கு களில் உள்ள அநேக கிராமங்களிலும் வஸித்து வருகிறார்கள். அவர்கள் எல்லா ருக்கும் இதைத் தெரிவித்து, அவர்களுடைய நிர்ணயமான அபிப்ராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் இச்சிறிய கால எல்லை போதாது. குறைந்த பக்ஷம் 6-மாஸ காலமாவது கொடுக்கப்படவேண்டும். ஆகையால் இப்பொழுது குறிக்கப்பட்டிருக்கும் காலத்தை மாற்றி, 1946ஞு பிப்ரவரிமீ 23உ பரியந்தம் ஆலோசனைக்குரிய கால எல்லை கொடுக்கும்படி நாங்கள் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கிர்க: இந்த ஹிந்து மத எண்டௌமெண்ட் ஆக்ட் விஷயமாக ஏற்படுத்தப்பட்ட வெங்கடரமண ராவ் கமிட்டியாரின் அறிக்கை இன்னும் வெளிவரவில்லை. அந்தக் கமிட்டியாரை ஏற்படுத்தின காலத்தில், ஜனங்களுடைய பிரதிநிதியாள லெஜிஸ்லேச்சர் அமுலில் இல்லையென்னும் காரணத்தால், அப்பொழுது ஜனங்களால் ஆக்ஷேபிக்கப்பட்ட விஷயங்களெல்லாம் அந்த ஸமயம் விலக்கப்பட்டனவென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்தக் கமிட்டியாரும் அம்மாதிரி விஷயங்களை அந்தக் காரணத்தினாலேயே தங்களுடைய ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளாமல் தூர விலக்கி விட்டார்களென்று நாங்கள் அபிப்ராயப்படுகிறோம். ஒருகால் அம்மாதிரி விஷயங்களின் ஆலோசனை அப்படி அவஸரப்பட்டுச் செய்ய வேண்டுவதில்லை யென்பதும், அவைகளைச் சரியான படி மஹா ஜனங்களால் ஏற்படுத்தப்படும் சட்ட ஸபையாரே ஆலோசித்து முடிவு செய்வதற்குத் தகுந்த அதிகாரிகள் என்பதும், அவைகளை ஆலோசனையிலிருந்து விலக்கினதற்குக் காரணமாகக்கூடும். அந்த முடிவு ஏற்பட்டு இன்னும் ஒரு வருஷங்கூட ஆகவில்லை. இதற்குள் அப்பொழுது இருந்த காரணங்கள் என்ன மாறுதலை அடைந்துவிட்டன வென்றும், என்ன புதிய அவஸரம் இப்போது நேர்ந்துவிட்ட தென்றும் எங்களுக்குத் தெரியவில்லை. மேலும் இப்பொழுது அட்வைஸர்களின் ராஜாங்கம் மாறி முன் இருந்தது போல மஹா ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அங்கத்தினர்களுடைய சட்ட ஸபை சீக்கிரத்திலேயே ஸ்தாபிக்கப்படும்போல் தெரிகிறது. அன்றியும் 93-வது ஸெக்ஷனை ஆதாரமாகக் கொண்டு செய்யப்படும் ஏற்பாடுகளெல்லாம், அவ்வப்போதைக்கு மாத்ரம் ஊர்ஜிதத்தில் இருக்குமேயொழிய நீடித்திருக்கத் தக்கவையல்ல. ஆகையால், ஸமீபத்தில் அப்படிப்பட்ட சட்ட ஸபை ஏற்படும்போல் இருக்கிறபடியால், அது ஏற்படுவதற்குள் அவஸரப்பட்டு இப்பொழுது அட்வைஸரி சர்க்கார் சட்டங்களில் மாறுதல்களை ஏற்படுத்த ப்ரயத்தனப்படுவது வீண் முயற்சியேயாகும்.

1927-ம் ௵ முதல், ஆக்டானது சட்டமாக அமுலுக்கு வந்ததற்குப் பிறகு, அதில் அனேக மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளுள் சில மிகவும் முக்யமானவை. இவை எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து, அந்தப் பழைய சட்டத்தை ஒருவிதத்திலும் குறைவின்றிக்கே பூர்ணமாகச் செய்ய வேண்டிய காலம் நெருங்கியிருக்கையில், மஹாஜனங்கள் ஆக்ஷேபிக்கக்கூடிய மற்றுமொரு புதிய திருத்தத்தை இப்பொழுது செய்ய முயற்சிப்பது உசிதமன்று.

இந்தக் காரணங்களால், இவை எல்லாவற்றையும் தீர்க்கமாக ஆலோசித்துத் தங்களுடைய முடிவான அபிப்ராயத்தை எவ்வித குறைவு மின்றிக்கே தெரிவித்துக்கொள்வதற்கு, இப்பொழுது மஹா ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் காலம் போதவே போதா தென்பதை வற்புறுத்தித் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நிர்க: இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கும் பில்லில் அநேக முக்யமான மாறுதல்கள் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றன.

முதலாவது: இதுவரையில் இந்த ஆக்டுக்கு உட்படாமலிருந்த இந்தப் பட்டணத்திலுள்ள தேவாலயங்கள், இப்பொழுது இந்த ஆக்டுக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றன.

இரண்டாவது: இதுவரையில் சில தேவாலயங்கள் இந்த ஆக்டுக்கு ஆளாகாமல் அநேக விசேஷ பாகங்களிலிருந்து விலக்கப்பட்டிருந்தன. இப்பொழுது அவைகளுக்கும், இதுவரை விலக்கப்படாமலிருந்த ஆலயங்களுக்கும் உள்ள வித்யாஸம் உபேக்ஷை பண்ணப்பட்டிருக்கிறது. இதுவரையில் ஆக்டுக்கு ஆளாகாமலிருக்கும் சில ஆலய தர்மகர்த்தாக்கள், பரம்பரையாக அந்த ஸ்தானத்திற்கு அதிகார முள்ளவர்க ளென்பது அங்கீகரிக்கப்பட்டு வந்தது. ஜமீன்தார்கள், மடத்தின் தலைவர்கள், நகரத்தார்கள் என்று சொல்லப்படுமவர்கள், இன்னும் இவர்கள்போன்ற மற்றும் சிலர், அப்படிப்பட்ட பாத்தியதை யைத் தொன்றுதொட்டு அநுபவித்து வந்திருக்கிறார்கள். ஷை உரிமையெல் லாம் இந்தப் புதிய பில்லால் நிர்ராகரிக்கப்பட்டதாகின்றது.

மூன்றாவது: இது வரையில் இந்த விலக்கப்பட்ட ஆலயங்களும், மடம் முதலியவைகளும், தங்களுடைய கணக்கு வழக்குகளைத் தாங்களே நேரிலேயோ, தங்களால் நியமிக்கப்பட்டுள்ள பரிசோதகர்களைக் கொண்டோ பரிசோதனை செய்துவந்தார்கள். இப்பொழுது இந்தக் கணக்குப் பரிசோதனை முழுவதும் எண்டௌமெண்ட் போர்டார் வசம் ஒப்புவிக்கப்படவேண்டியதாயிருக்கிறது. அந்தப் போர்டார்களே பரிசோதகர்களை நியமிக்கவும், அவர்களை விலக்கவும், கணக்குகளைப் பரிசோதித்து நிர்ணயம் செய்விக்கவும், பூர்ணாதிகாரிகளாவர். ஆலய தர்ம கர்த்தர்களுக்கோ, மடாதிபதிகளுக்கோ, அந்த அதிகாரம் கொஞ்சமேனும் இல்லாமற் போய்விடும். இந்தப் பரிசோதனை விஷயமாக மற்றுமொரு புதிய அம்சம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது: வரவு செலவுகள் நடக்க நடக்க அப்பொழுதுக் கப்பொழுதே எண்டௌமெண்டு போர்டார்களால் நியமிக்கப்படும் பரிசோதகர்களாலேயே கணக்குகள் பரிசோதிக்கப்படவேண்டும் என்பதுதான். இம்மாதிரியான பரிசோதனை இப்பொழுது எல்லா ஆலயங்களிலும் அந்தந்த தர்மகர்த்தர்களால் நடத்தப்பட்டு வருகிறபடியால், போர்ட்டார் இதில் பிரவேசித்து இதைத் தங்கள் வசத்தில் வைத்துக் கொள்வதில் விசேஷ பயன் யாதென விளங்க வில்லை. மேலும் இம்மாதிரியான மாறுதல்கள் சென்ற வருஷத்தில் ஆலோசிக்கப்பட்டு, இவை அநாவசியங்க ளென்று விலக்கப்பட்டன.

நான்காவது: பழைய ஏற்பாட்டின்படி ஸிவில் கோர்ட்டாருக்கு எல்லா விஷயத்திலு முள்ள விசேஷாதிகாரம், இப்பொழுது அந்தக் கோர்ட்டாரிட மிருந்து எடுக்கப்பட்டுப் போர்டாருக்கே அதீனார்ஹமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இது மிகவும் தவறான கார்யம். ஏனென்றால்: இதுவரை போர்டார் செய்துவந்த பல தீர்மானங்கள் கோர்ட்டாரிடம் அப்பீல் செய்யப்பட்டபொழுது மாற்றப்பட்டிருக்கின்றன. இதனால் போர்டாருக்கு; ஸிவில் கோர்ட்டா

ரிடம் ஒருவித அதிருப்தி பிறந்திருக்கிறதென்றும், அந்தக் காரணத்தாலேயே போர்டாருக்கு அதிகாரம் முழுவதையும் தங்களிடமே வைத்துக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணம் உண்டாயிருக்கிறதென்றும் ஸந்தேஹிக்க இட மிருக்கிறது. ஜனங்கள் நியாயம் பெறுவதற்கு இந்த மாறுதல் அனுகூலமன்று என்பது நன்கு விளங்குகின்றதன்றோ?

ஐந்தாவது: தேவாலய தர்மகர்த்தாக்களையும், மடாதிபதிகளையும், அவர்களுக்கு வெகுகாலமாக இருந்துவந்த பரம்பரா பாத்யதையை அநாதரித்துப் போர்டார், அவர்களைத் தமக்கு நியாயமென்று தோன்றும்பொழுது விலக்கத் தங்களுக்கே அதிகார முண்டென்னும் ஒரு புதிய வ்யவஸ்தையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி விலக்கப்பட்டவர்கள், மேல் அதிகாரிகளுக்கு அப்பீல் செய்துகொள்ள அதிகார மற்றவர்களாம். தவிர, போர்டார் தங்களுக்கு நியாயமென்று தோன்றினபொழுது, மடம் முதலியவைகளின் விஷயங்களைப் பரிபாலனம் செய்வதங்கு, அந்த மடாதிபதிகளுடன் கூட இருந்து வேலை பார்த்து வரும்படி சில அதிகாரிகளை நியமிக்கத் தமக்கு அதிகார முண்டென்றும், நியமிக்கப்படும் அவ்வதிகாரிகளுக்கு மடாதிபதிகளுக்கு உரிய பாத்தியத்துக்குச் சமமான பாத்தியம் ஸகல விஷயங்களிலும் உண்டென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது, மடாதிபதிகளின் அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் மிகக் குறைவை உண்டுபண்ணும் என்பது நிச்சயம். ஸர்க்காரால் நியமிக்கப்பட்ட கணக்குப் பரிசோதகர்களின் அறிக்கையில் எழுதப்பட்டிருப்பது சரியா தப்பா என்பதை நிர்ணயித்துக்கொள்ளத் தர்மகர்த்தர்களுக்கு எவ்வித ஸிவில் கோர்ட் அப்பீலும் இடம் கொடுக்காமலே அந்தக் கணக்குப் பரிசோதகர்களின் அறிக்கை பலத்தைக்கொண்டே அந்தந்தத் தர்ம கர்த்தாக்களை அவர்கள் பதவியினின்றும் விலக்குவதற்குத் தங்களுக்கு அதிகார முண்டென்றும் இந்தப் புதிய பில்லில் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது அநேக அநீதிகளுக்கு இடங்கொடுக்கும். கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துகொள்ள அதிகார மில்லாமற்போனாலும், கவர்ன்மெண்டாரிடம் முறையிட்டுக்கொள்ளலா மென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் வ்யவஸ்தை பயனற்றதே. இம்மாதிரி பல மாறுதல்கள் இந்தப் பில்லில் அடங்கியுள்ளன. இவையெல்லாம் ஆக்ஷேபிக்கத் தகாதவை யென்று சொல்லக்கூடுமா? இப்படி ஆக்ஷேபகரமான மாறுதல்களை இம்மாதிரி அவஸரப்பட்டுக்கொண்டு செய்வது கொஞ்சமேனும் சரியன்று. இதைத் தீர்க்கமாக ஆலோசிக்க மஹாஜனங்களுக்கு நீடித்த காலத்தைக் கொடுத்து, அவர்களால் செய்யப்படும் ஆக்ஷேபங்கள் எல்லாவற்றையும் ராஜாங்கத்தார் நன்றாக ஆலோசித்து நியாயத்தைச் செய்யவேணு மென்று நாங்கள் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆறாவது: தற்போதைய நிலையில் ஷை சீர்திருத்த மசோதாவுக்கு யாதொரு அவசியமு மில்லை என்பது பின்வருமவற்றாலும் விளங்கும். மடாதிபதிகளும், எண்டௌமெண்டு போர்ட் அதிகாரத்திலிருந்து இதுவரை விலக்கப்

பட்டிருந்த ஆலய தர்மகர்த்தாக்களும், தங்கள் தங்கள் அதீனத்திலும் மேற்பார்வையிலுமுள்ள ஸ்தாபனங்களின் சொத்துக்களையும் அப்போதைக்கப்போது சிஷ்யகோடிகளாலும் பக்தர்களாலும் ஸமர்ப்பிக்கப்பட்டுவரும் திரவ்யங்களையும் அவரவர்கள் நோக்கத்தை அநுஸரித்துப் பொதுஜன நலத்தின் பொருட்டுச் சிறந்த முறையில்தான் விநியோகித்து வருகின்றனர். ஸமூஹத்தினிடையே இலவசக்கல்வி புகட்டும் ஸ்தாபனங்களை ஏற்படுத்துதல், அறிவையும் மதாபிமானத்தையும் வளர்ப்பதற்குரிய சிறந்த நூல்கள் பத்திரிகைகள் முதலியன வெளியிடுதல், இவைபோன்ற ஜனங்களுக்கு நன்மை பயக்கும் முறையிலேயே பெருந்தொகை செலவழிக்கப்பட்டு வருகிறது. அறிவைப் பெருக்கியும், ஆங்காங்கு அடிக்கடி வித்வத் ஸபைகளைக் கூட்டி வித்வான்களுக்கு ஸம்பாவனைகளை அளித்து உத்ஸாகப்படுத்திப் போற்றியும், கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்ட மஹான்களைக்கொண்டு பற்பல விடங்களில் மதப்ரசாரம் செய்தும், மடாதிபதிகளும் தர்மகர்த்தர்களும் சிறந்த ஸமூகத் தொண்டை இயற்றிவருவது பலரும் அறிந்த விஷயம். இலவசக்கல்வி அபிவிருத்திக்கென்றே ஸமீபத்தில் மதுராந்தகத்தில் ஸ்ரீ அஹோபில மடாதிபதிகளால் கலாசாலை ஒன்று சுமார் 30,000 ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டு, ப்ரதிமாதம் சுமார் 2000 ரூபாய் செலவில், ஏறக்குறைய 100 சிறுவர்களுக்கு இலவச போஜன வசதிகளுடன் கல்வி புகட்டப்பட்டு, ஷை கல்லூரி 3-வர்ஷங்களாக விலக்ஷணமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றுவருவதும், அக்கல்லூரி இன்னும்பல துறைகளில் மேம்பாடு அடைந்து சிறப்புற்று விளங்குவதற்குரிய முயற்சிகளை ஷை ஸ்ரீ மடாதிபதிகள் இடைவிடாது உத்ஸாஹத்துடனும் ஊக்கத்துடனும் செய்துகொண்டு வருவதும், என்று குறிப்பிடத்தக்கவை. ஷை அஹோபிலமட அதீநத்திலும், ஸ்ரீ சங்கரமட அதீநத்திலும், பெருந்தனச் செலவில் பல அரிய நூல்கள் வெளியிடப்படுவதோடு, ஷை மடாதிபதிகளால் மாதாந்தரப் பத்திரிகைகளும் வெளியிடப்பட்டுவருவது கவனித்துப்போற்றத்தக்கது. இம்முறைகளில் மடாதிபதிகளும் பிறரும், தங்கள் அதீனத்திலுள்ள தர்ம சொத்துக்களைத் தக்க அறிஞர்களுடன் கலந்து ஆலோசனைசெய்து சிறந்த முறையில் விநியோகித்துத் தமது ஸ்தாபனங்களை ஒழுங்குபடுத்திப் பொது ஜனங்களையும் ஒரு கட்டுப்பாட்டுடன் நல்வழிப்படுத்தப் பலவித முயற்சிகள் செய்துகொண்டிருக்க, ஷை மடாதிபதிகள் முதலியோர்களைக் கட்டுப்படுத்தும் சீர்திருத்தங்களைச் செய்ய முயல்வது, அன்னாரின் உத்ஸாஹத்தைக் குறைப்பதோடு அவர்களுடைய பெருமைக்கும் இழிவை உண்டாக்கி, பக்தகோடிகளுடையவும் சிஷ்யர்களுடையவும் உயரிய மனப்பான்மைக்கும் பக்திக்கும் இழுக்கை விளைவிப்பதாகும்.

இக்காரணங்கள் பற்றி இப்பொழுது செய்ய இருக்கும் சீர்திருத்தங்கள் அநாவசியமாக இருப்பதுமன்றி, பலவித கேடுகளையும் விளைவிப்பதாயிருத்தலையும் உத்தேசித்து, நாங்கள் ஏகமனதுடன் ஷை சீர்திருத்தங்களைத் தீவ்ரமாய்க் கண்டிக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: (Grantha line)

செய்திகள்

(1)

ஸ்ரீ கல்யாணப்ரவர்த்திநீ ஸபா, மதுராந்தகம்

இந்த ஸம்வத்ஸரத்தில், இந்த ஸபையின் ஆரம்பக் கூட்டமானது 4—8—'45 சனிக்கிழமை தினம் ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை கௌரவ அத்யக்ஷர் ஸ்ரீ. உப. கல்யாணபுரம் ஈச்சம்பாடி T. ராமஸ்வாமி அய்யங்கார் (M. A., L. T.) ஸ்வாமியின் தலைமையில் கூடிற்று. அவ்வமயம் இந்த ஸபையின் நிர்வாஹத்திற்காக, வித்யார்த்திகள் P. C. வரதாசாரியும் S. வரதாசாரியும் ஸஹ கார்யதர்சிகளாக வித்யார்த்திகளால் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்த ஸபையின் ஆரம்ப உத்ஸவமானது 12—8—'45 ஞாயிற்றுக்கிழமை யன்று இக்கலாசாலை கௌரவ அத்யக்ஷர் ஸ்ரீ உப. கல்யாணபுரம் ஈச்சம்பாடி T. ராமஸ்வாமி அய்யங்கார் (M. A., L. T.) ஸ்வாமியின் தலைமையில் கூடிற்று. அப்போது இக்கலாசாலை கௌரவ அத்யாபகர் திருநெல்வேலி ஸ்ரீ உப. R. வரதாசார்ய ஸ்வாமி, B.A., L.T., ஷ ஸபையின் நோக்கங்களையும், வித்யார்த்திகள் இந்த ஸபையை நடத்தவேண்டிய முறையையும், அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறையையும் நன்கு உபதேசித்தார். பிறகு ஸ்ரீ அழகிய சிங்கரால் ஏற்படுத்தப்பட்ட இக்கலாசாலையில் வித்யார்த்திகள் அழகாய் வித்யாக்ரஹணம் செய்துகொள்வதுடன், அநுஷ்டாந பரர்களாகவும் இருக்கவேண்டுமென்று அத்யக்ஷ ஸ்வாமி வற்புறுத்தினார்.

22—9—'45 திங்கட்கிழமை இக்கலாசாலை ந்யாயாத்யாபகரான ஸ்ரீ உப. நாராயணாசார்ய ஸ்வாமி தலைமையில் இந்த ஸபை மறுபடியும் கூடிற்று. அப்பொழுது வித்யார்த்தி M. S. விஜயராகவன் "ந கார்யோ விதவாவிவாஹ:" என்னும் விஷயத்தை உபந்யஸித்தார்.

28—9—'45 ஞாயிற்றுக்கிழமை தினம் இக்கலாசாலை உபாத்யக்ஷர் ஸ்ரீ. உப. முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் தலைமையில் இந்த ஸபை கூடிற்று. அப்பொழுது V. வாஸுதேவன் என்ற வித்யார்த்தி, "ஸம்ஸர்கஜா தோஷகுணா பவந்தி" என்ற விஷயத்தைக்குறித்து உபந்யஸித்தார்.

* * *

(2)

ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம், மதுராந்தகம்

ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் உத்ஸவம் வழக்கம்போல் 10-நாள் அதி விமர்சையாக நடந்தது. திருநக்ஷத்ர தினத்தன்று ஸாயங்காலம் ஸ்ரீஸ்வாமி வீதிவலமாகக் கோயிலுக்கு எழுந்தருளி, அங்குள்ள எல்லா ஸந்நிதிகளிலும் மங்களாசாஸநம் ஆன பிறகு, ஸ்ரீ அழகியசிங்கரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸம்ஸ்க்ருத மஹா கலாசாலைக்கு எழுந்தருளினார். அங்குள்ள ப்ரார்த்தநா மண்டபம் தர்சநீயமாக வெகு நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு எழுந்தருளியிருந்து உபயம் கண்டருளின பிறகு, அங்கிருந்து வீதிவலமாகவே ஸ்ரீ அஹோபில மடத்திற்கு எழுந்தருளினார். இரவு சாற்றுமறை மிகவும் இனிது நடந்தேறியது.

P. C. வரதன், [கார்யதர்சி.]

(3)

கல்கத்தாவில் வார்ஷிக திருநக்ஷத்ரக் கொண்டாட்டம்

ஸ்ரீஜயந்த்யாதி நாள்களைக்காட்டிலும் உத்தமமாகப் பெரியோர்களால் கொண்டாடப்படும் நம் ஆசார்யர்களுடைய திருவவதார தினங்களான இப்புரட்டாசித் திருக்கேட்டையிலும் (11-10-45) திருவோணத் திருநாளிலும் (15-10-45), ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களும் மற்றுமுள்ள பக்தர்களும் ஒன்றுகூடி ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் இவர்களுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவங்களை அதி விமர்சையாகக் கொண்டாடினார்கள்.

வாங்கல் ந. நாராயண தாஸன். 10—10—45.

———o———

(4)

ஸ்ரீ கமலாபுரம் என்னும் மேல்மா அக்ரஹாரத்தில் ஆசார்ய மஹோத்ஸவம்

இந்த அக்ரஹாரத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீகமலவல் லீஸமேத கல்யாண வேங்கடேசுவரருக்கு நவராத்ரி மஹோத்ஸவம் அதி விமரிசையாக நடந்தேறியது. அத்துடன் நம் ஆசார்ய சிரேஷ்டரான ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுடைய உத்ஸவமும் புரட்டாசி 21௳ ஆரம்பித்து (பெருமாள்கோயில் அநுஷ்டாநப்படி) பத்து நாள் வெகு விமர்சையாகவே நடந்தேறியது. ஷ உத்ஸவத்தின் மத்தியில், 25௳ ஸ்ரீஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய திருநக்ஷத்திர மஹோத்ஸவமும் விமர்சையாகவே கொண்டாடப்பட்டது. 29,௳, 30௳, ஆகிற இரண்டு தினங்களிலும் எம்பெருமானும் ஆசார்யர்களும் விசேஷ திருமஞ்சனம் கண்டருளினார்கள். மறுநாள் ஐப்பசி 1௳ விடாயாற்றி உத்ஸவம் நடந்தது. அன்று, ஸ்ரீமதுராந்தகம் கலாசாலையில் அத்யாபகராயிருக்கும் ஸ்ரீ உப. ஏ. வி. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியாலும் போஸ்ட்மாஸ்டர் கல்யாண வெங்கடாசார்ய ஸ்வாமியாலும் **ஆசார்யாவதாரம்** என்பதைப்பற்றி அழகிய உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. மூன்று நாள் விடாயாற்றியுடன் உத்ஸவம் இனிது நடந்தேறியது.

பத்துநாள் மஹோத்ஸவமும், இவ்வக்ரஹார வாஸிகளாயும் ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்ய கடாக்ஷ பாத்ரபூதர்களுமான தேசிகபக்தர்களாலேயே நடத்திவைக்கப்பட்டது.

மேல்மா, 22-10-45. } உ. ரங்காசார்யர்.

(178-ம் பக்கம் தொடர்ச்சி.)

டத்தை ஆதாரமாகக் கொண்டன்றோ இப்பொழுது அவர்கள் தமக்குக் கிடைத்திருக்கும் அதிகாரத்தால் த்ருப்தி யடையாதவர்களாய், மேற்கொண்டு சில புதிய அதிகாரத்தை அபேக்ஷிக்கிறார்கள். ஆகையால் இனி இது போன்ற ஆக்ரமத்திற்கு ஸம்பாவனையே இராமலிருக்குமாறு “மூலே குடார:” என்னும் ந்யாயப்படி ஸகல தீங்குக்கும் வேராக இருக்கும் அந்தச் சட்டத்தையே அடியோடு பிடுங்கி எறிவதற்கு நாம் ப்ரயத்நப்படவேண்டியது தான் நம் முக்யமான கார்யம். நமது பெரியோர்கள் அந்தக் கார்யத்தை ஸாதித்துக் கொள்ள ப்ரயத்நப்படுவார்களா?

* * *

ஸ்ரீ அழகியசிங்கரின் யாத்ரோத்ஸவம்

ஸ்ரீ அழகியசிங்கர் இப்பொழுது ரெய்ச்சூரை விட்டுக் கோபாலபேட்டை மார்க்கமாக ஹைத்ராபாத் எழுந்தருளியிருப்பதாகத் தெரிகின்றது. எழுந்தருளு மிடங்களில் ஆஸ்திக ஜனங்க ளெல்லாரும் பெரிய கௌதூஹலத்துடன் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஆராதித்து வருகிறார்களாம். ஹைத்ராபாத்தில் ஸ்வல்ப திநங்கள் தங்கிவிட்டு, பிறகு அதற்கும் வடக்கிலுள்ள ஸ்தலங்களை அநுக்ரஹித்துக்கொண்டு, தை மாஸத்திற்கு முன்னதாகவே பம்பாய் போய்ச் சேரும்படியாக இருக்கும். தை மாஸத்தில் நடக்கவேண்டிய ஸ்ரீ அழகியசிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் வித்வத் ஸதஸ்ஸும், பம்பாயிலேயோ அல்லது ப்ரயாகையிலோ நடைபெறலா மென்று தெரிகிறது. ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திருவுள்ளம் எப்படி ப்ரவஹிக்கு மென்று யாரால் சொல்லக்கூடும்?

* * *

ஆந்த்ர தேசத்தில் புயல் காற்று

சற்றேறக்குறைய பத்துப் பதினைந்து திநங்களுக்குமுன் உக்ரமான புயல்காற்று ஒன்று உண்டாகி, வடக்கில் இருக்கும் காக்கிநாடா குண்டூர் பஜவாடா முதலிய இடங்களில் மிக்க வேகத்துடன் அடித்து அந்த தேசத்திற்குப் பெருத்த நாசத்தை விளைவித்திருப்பதாக அறிகின்றோம். ஸமுத்ரம் பொங்கிவந்து, ஸமுத்ரக் கரையிலிருந்த குடிசைகளெல்லாவற்றையும் மூழ்க அடித்து விட்டதாம். பயிர்களெல்லாம் நாசமாகி விட்டனவாம். கணக்கற்ற ஆடு மாடுகளின் சேதத்துடன், அநேக மனிதர்களும் நாசம் அடைந்தார்களாம். அநேக ஆயிரம் ஜனங்கள் வீடு வாசல்களை இழந்து, உண்ண உணவு இராமலும் தங்குவதற்கு வீடு இராமலும் கஷ்டப்படுகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இதர இடங்களிலுள்ள பல தார்மிகர்கள் முன்வந்து, துயரப்படும் இந்த ஜநங்களுக்குத் தங்களால் ஸாத்யமான உதவியைச் செய்கிறார்களாம். இம்மாதிரியான உதவி, தாத்காலிகமாக ஸ்வல்ப ஆறுதலைக் கொடுக்குமே யொழிய, அவர்களுக்கு நேர்ந்துள்ள ச்ரமத்தை நீக்கிப் பழைய நிலைமையில் அவர்களை நிறுத்தத் திறமை யுடையதல்லவே. ஸ்த்ரீகளும், சிசுக்களும், வ்ருத்தர்களும் படும் கஷ்டத்தை நினைக்கும்பொழுது ஹ்ருதயம் கலங்குகிறது. இம்மாதிரியான மஹோத்பாதங்களும் கர்ம பலமென்று ஸமாதாநம் செய்து கொள்ளலாமோ?

* * * * *

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

யோ(அ)ந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஹிந்துதர்ம ஸ்தாந சட்டத்தின் திருத்த மசோதா.

ஹிந்து மத ஸம்பத்தமான தர்ம ஸ்தாநங்களில் தர்ம பரிபாலநம் த்ருப்தி கரமாக நடைபெற்று வருகின்றதா என்பதைப் பராமர்ஶித்துப் பார்க்கும் பொருட்டு ராஜாங்கத்தார், 'ஹிந்து மத ஸ்தாந த்ரவ்ய பரிபாலந ஸபை' என்று ஒரு ஸபையை நியமித்திருக்கிறார்கள் என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்த ஸபையின் அங்கத்தினர்கள் ஐந்து பெயர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் உதாரமான சம்பளம் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் அந்த ஸ்தாநங்களை ஸாக்ஷாத்தாகப் பார்ப்பதற்காக அடிக்கடி ஸஞ்சாரம் செய்வதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் அனைத்தும் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த ஸபையார் தமது கடமையை அநேக சிப்பந்திகளைக் கொண்டு நிறைவேற்றி வருகிறார்கள். அந்தச் சிப்பந்திகள் ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் அந்தஸ்துக்கு அநுகுணமாகச் சம்பளங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இப்படிப் பெரியதொரு கூட்டம் சேர்க்கப்பட்டிருக்கின்றது. தேவாலயங்களிலும், சிற்சில மடங்களிலும், இன்னும் இம்மாதிரியான பல இடங்களிலும், அந்தச் சிப்பந்திகள் தங்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தி, அங்கங்குள்ள தர்மகர்த்தாக்களுடன் தாமும் ஒரு தர்மகர்த்தாபோல ஆலய கார்யங்களை நிர்வஹிக்கிறார்கள். இவர்களுடைய சம்பளச் செலவுக்கும் இன்னும் இது ஸம்பத்தமான மற்றைச் செலவுக்குமாக ஒவ்வொரு மத ஸ்தாநத்திலிருந்து ஒரு வரியும் வஸூல் செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறு வஸூல் செய்யப்படும் த்ரவ்யத்தை ரக்ஷிப்பதற்கும் செலவிடுவதற்கும் அந்த ஸபையாரே அதிகாரிகள். இம்மாதிரியான ஒரு வ்யவஸ்தை 1927-ம் வருஷத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு அப்பொழுது முதல் அமுலில் இருந்து வருகின்றது.

ஆரம்ப காலத்தில் அநேக காரணங்களை உத்தேஶித்துச் சிற்சில மத ஸ்தாநங்கள் இந்த ஸபையாருடைய நியமநத்திற்கு உட்படாதவைகளாக விலக்கி வைக்கப்பட்டிருந்தன. வேறு சில மத ஸ்தாநங்களில் வரி வஸூல் செய்வதிலும் சிற்சில வ்யத்யாஸங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன. ஏதாவது ஒரு மத ஸ்தாநம் சரிவர நடத்தப்பட்டு வரவில்லை யென்று அந்த ஸபையாருக்குத் தோன்றி, அந்த ஸபையார் அந்த ஸ்தாநத்தின் தர்மகர்த்தாக்களை ஶிக்ஷிக்கவோ விலக்கவோ அல்லது வேறு விதமான எச்சரிக்கை கொடுக்கவோ உத்தரவுகளைப் பிறப்பித்தால், அந்த உத்தரவுகள் ந்யாயத்திற்கோ சட்டத்திற்கோ விருத்தமாக இருக்கும் பக்ஷத்தில், அவைகளை ரத்து செய்யும்படி ந்யாயாதிபதிகளுக்கு மனுச் செய்து கொள்ளவும் அதை விசாரணைக்குக் கொண்டுவரும்படி செய்யவும் அந்தத் தர்மகர்த்தாக்களுக்கு அதிகார முண்டு. அப்படி அநேக விஷயங்களில் மனுச் செய்து கொள்ளப்பட்டு, ஸபையாரின் உத்தரவுகள் ந்யாயாதிபதிகளால் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இந்த விஷயங்களில் ந்யாயாதிபதிகள் செய்யும் தீர்ப்பே

முடிவு. இந்த வ்யவஸ்தைகள் ஆரம்ப காலத்தில் பூர்ணமாக அமுலி லிருந்தபோதிலும், காலக்ரமேண அப்பொழுதைக்கப்பொழுது ஸ்வல்ப மாறுதல்களை அந்தந்தக் காலாநுகுணமாக அடைந்து வந்திருக்கின்றன.

இப்பொழுது அந்த ஸபையார் அந்தச் சட்டத்தினால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் போதாதென்றும், அநேக அம்சங்களில் தமக்கே பூர்ண அதிகாரம் கொடுக்கப்படவேண்டு மென்றும், தம்முடைய அதிகாரத்திலிருந்து இது பர்யந்தம் விலக்கப்பட் டிருக்கும் தர்ம ஸ்தாநங்களும் தம்முடைய பராமர்ஸிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டு மென்றும், தர்ம ஸ்தாநங்களிலிருந்து வஸூல் செய்யப்படும் வரி விஷயத்தில் எல்லா தர்ம ஸ்தாநங்களுக்கும் உத்தம ரீதிப்படி எவ்வித வைஷம்யமு மின்றிக்கே வஸூலிக்கும்படி விதிகள் ஏற்படுத்தப்படவேண்டு மென்றும், தர்ம ஸ்தாநங்களின் கணக்கை அப்பொழுதுக்கப்பொழுது பரீக்ஷித்து வருவதற்காகக் கணக்குப் பரிஸோதகர்களைத் தாங்களே நியமித்துக்கொள்ளவேண்டு மென்றும், கணக்குகளில் ஏதாவது பிசகு இருப்பதாகத் தமக்குத் தோன்றினால் அதற்காகத் தர்ம கர்த்தாக்களை ஸிக்ஷிப்பதற்குத் தமக்கே அதிகாரம் வேண்டுமென்றும், இன்னும் இம்மாதிரி பல வித மாறுதல்களை அந்தச் சட்டத்தில் ஏற்படுத்தவேண்டு மென்றும் கேட்டுக் கொண்டதன்பேரில், ராஜாங்கத்தார் அம்மாதிரி ஒரு மசோதாவை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அதைப் பத்ரிகைகளில் ப்ரசுரம் செய்து, அதைப் பற்றி யாராவது ஆக்ஷேபம் செய்யவேண்டுமானால் அக்டோபர் மீ 24 உக்கு முன்னதாகத் தமது ஆக்ஷேபங்களை ராஜாங்கத்தாருக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்துக்கொள்ளவேண்டு மென்று ஒரு உத்தரவையும் பிறப்பித்திருக்கிறார்கள். ‘இந்த மாறுதல்கள் ந்யாயத்திற்கு ஒத்தவையா? இப்பொழுது இவைகளைச் செய்ய வேண்டியது அவசியம்தானா?’ என்பன போன்ற விஷயங்களை விசாரிப்பதற்காக இப்பொழுது பலவிடங்களில் அநேக ஆஸ்திகர்களால் ஸங்கங்கள் நடத்தப்பட்டு வந்தன. ‘இவை ந்யாயத்திற்கு ஒத்தவை யல்ல; இவைகளை இப்பொழுது செய்து முடிப்பதற்கு ஆவச்யகதையு மில்லை’ யென்றே எல்லாரும் மறுத்திருப்பதாகவும் தெ[illegible]வருகிறது.

இதைப்பற்றி நமது அபிப்ராயம் என்னவென்றால்:—‘இது பெரிய அக்ரமம்; ந்யாயத்திற்கும் விருத்தம்; தர்மத்திற்கும் விருத்தம்; பெரியோர்கள் இதைத் துராக்ரமமென்றே சொல்வார்கள்’ என்பதுதான். ஸ்ரீ தேஸிகன், ஸ்ரமப்பட்டு ஸம்பாதிக்கப்பட்ட வஸ்துவை நாஸம் வராமல் ஸம்ரக்ஷிப்பதிலுள்ள க்லேசங்களைப் பற்றி பேசிவருகையில், ரக்ஷ்ய வஸ்துவுக்கு நாஸம் நாலு இடங்களிலிருந்து ஸம்பவிக்கக்கூடு மென்று சொல்லிவிட்டு, அவைகளை உதாஹரிக்குமிடத்தில், அரசனுக்கே முதன்மையைக் கொடுத்துப் பேசியிருக்கிறார். ‘தீயினாலும் திருடர்களாலும் எலி முதலியவைகளாலும் நாஸம் நேரலாம்; ஆனால் அவைகளைக்காட்டிலும் அரசனிடமிருந்தே நாம் மிகவும் பயப்படவேண்டும்’ என்று அநுக்ரஹிக்கிறார்.

“[illegible]
[illegible]”

என்பது அவருடைய திவ்ய ஸூக்தி. தர்ம ஸ்தாநங்களுடைய ஸொத்து முழுவதும் தார்மிகர்களால் அந்தத் தர்ம ஸ்தாநத்திற்கே என்று கொடுக்கப்பட்ட ஸொத்து. அதை அந்த ஸ்தாநங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து மற்றொருவன் அபஹரித்துத் தனது இஷ்டப்படி அதை விநியோகார்ஹமாகச் செய்துகொள்வது அபந்யாயம் ஆகாதோ?

மற்றவர்கள் இத்தகைய தொழிலைச் செய்தால் அவர்களைத் தண்டிக்கும்படி நாம் அரசர்களிடம் முறையிட்டுக் கொள்ளலாம்; அரசர்களே அபந்யாயத்தில் இறங்கினால் யாரிடம் போய் நாம் ப்ரதிகாரத்தைத் தேடிக் கொள்வது என்பது தெரியவில்லை. அவர்களைக் கேட்பவர்கள் ஒருவரு மில்லை என்றால் அது தோஷ மற்றதாகி விடுமோ? 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றங் குற்றந்தான்' என்றான் ஒரு தமிழ்ப் புலவன் பரமசிவனைப் பார்த்து. ப்ரக்ருதத்தில் ராஜாங்கத்தார் இந்தத் தர்ம ஸொத்துக்களைத் தங்கள் வசமாக்கிக் கொள்ளவும் அதைத் தாமே செலவிடவும் ப்ரயத்நப்படுகிறார்க ளென்பது இந்த மசோதாவிலிருந்து நன்றாக வெளியாகின்றது. இதை அக்ரம மென்றும் அபந்யாய மென்றும் அதர்ம மென்றும் சொல்வதற்கு என்ன ஆக்ஷேபம்? மஹாஜனங்களால் கொடுக்கப்பட்ட தர்ம ஸொத்துக்கு, அவர்களால் தர்மகர்த்தாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே ஸொந்தக்காரர்கள். அவர்கள் எவ்வித பிசகிலும் ப்ரவர்த்திக்கமாட்டார்க ளென்னும் நம்பிக்கை அந்த மஹாஜநங்களுக்கு உண்டு. அப்படி ஏதாவது பிசகு ஸம்பவித்தால், அதைச் சீர்திருத்திக்கொள்ள அந்த மஹா ஜநங்களுக்கு அதிகாரமே ஒழிய, மூன்றாவது மனுஷ்யனுக்கு யாதொரு அதிகாரமு மில்லை.

நிற்க: ஆலய தர்மகர்த்தாக்களுக்கும் மடாதிபதிகளென்று மடத்தின் ஆஸ்தாநத்தை வஹித்து வரும் அதிகாரிகளுக்கும் உள்ள விசேஷத்தை இந்த மசோதாவை ப்ரேரிப்பவர்கள் அறியவில்லை யென்றே நாம் நினைக்கிறோம். இவர்களின் ஆக்ரமம் தேவாலய விஷயங்களில் ஒருகால் ஸஹ்யமென்று அங்கீகரித்தாலும், மடம் போன்ற ஆஸ்தாநங்களில் அது மிகவும் அஸஹ்யமே. அந்த ஆஸ்தாநாதிபதிகள் கேவலம் தர்மகர்த்தாக்கள் அல்லர். அவர்கள் அந்த மடத்துக்கு ஸொந்தமான ஸொத்துக்களைப் பரிபாலித்து, அதை உசிதப்படி ஶிஷ்யர்களுடைய ஆநுகூல்யத்தில் விநியோகித்து வருவதுடன்கூட, அந்த மடத்தை ஆச்ரயித்துள்ள சிஷ்யர்களுக்கு ஆத்ம வித்யையை உபதேசித்துப் பகவானை அடைவிக்கும் மஹோபகாரத்தையும் செய்துவருபவர்கள். அந்தக் காரணத்தாலேயே அந்த ஶிஷ்யர்கள் அந்த ஆசார்யர்களைத் தைவத்துக்கு[illegible] துல்யமாகக் கொண்டாடி வருகிறார்கள். தைவம் எப்படித் தர்மம் தவறாதோ, அப்படியே ஒருகாலும் அந்த ஆசார்யர்களும் பிசகில் ப்ரவர்த்திக்கமாட்டார்கள் என்பது அவர்களின் த்ருடமான நம்பிக்கை. மேலும்: அந்த மடாதிபதிகள் ஸந்யாஸிகள்; தம்மை அண்டின ஶிஷ்யர்களுக்கு வேதாந்தோபதேசம் செய்வதும், அவர்களுக்கு ஆத்ம ச்ரேயஸ்ஸைத் தேடுவதுமே அவர்களுடைய முக்ய கார்யம். எப்போதும் பகவானை த்யாநித்துக்கொண்டு பொழுது போக்குகிறவர்கள். அப்படி வர்த்தித்து வரும் ஆசார்யர்களைக் கூலிக்காரருக்கு ஸமமாகக் கருதி, அவர்களை நினைத்தபோது ஸ்தாநத்தினின்று எடுப்பதும், நினைத்தபோது வைப்பதும், தவறிவிட்டாரென்று ஶிக்ஷைக்கு உட்படுத்துவதும் ந்யாய்யமாகுமா? அவரை ஆச்ரயித்த ஶிஷ்யர்கள்தாம் அம்மாதிரி நடத்தையை ஸஹிப்பார்களா? இன்னும் இவைபோன்ற அநேக காரணங்களால் நாம் இந்த மசோதாவைப் பலமாகக் கண்டிக்கிறோம்.

மற்றுமொரு ப்ரபலமான விஷயம்:—விக்டோரியா மஹாராணியார் ராஜ்ய பரிபாலநம் செய்துவந்த காலத்தில், இந்த இந்தியா தேச ஸம்பந்தமான ராஜாங்கத்தார் மத விஷயங்களில் கொஞ்சமேனும் ப்ரவேசிக்கமாட்டார் என்று ஒரு பெரிய உறுதி மொழியை அளித்திருக்கிறார். அதற்கு விருத்தமாக அந்த ராஜாங்கத்தாரே மத விஷயங்களில் ப்ரவேசித்து அவைகளைச் சீர்திருத்தம் செய்வதற்கென்று சட்டம் ஒன்றை ஏற்படுத்தி விட்டார்கள். இது பெரிய அக்ரமம். அந்தச் சட்டம் ஏற்படுத்துங் காலத்திலேயே நாம் பலமாக ஆக்ஷேபித்து அதை வரவொட்டாமல் தடுத்திருக்கவேண்டும். அப்படி அதைத் தடுக்காமல் நாம் உதாஸீநர்களாக நின்றது நமது பிசகே. அந்தச் சட்

]தொடர்ச்சி 175-ம் பக்கம் பார்க்க.]

1945-அக்டோபரில் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் சந்தா வரவு

				ரூ.	அ.
122	ஸ்ரீ	K. சேஷாத்ரி, மேலூர்	...	5	0
140	,,	பெருமாள் ரெட்டியார், ஆலந்தூர்	...	2	0
176	,,	A. V. ஸ்ரீநிவாஸையங்கார், கோயம்புத்தூர்	...	2	0
185	,,	ஸ்ரீநிவாஸ கோபாலாசாரியர், திருநெல்வேலி	...	3	0
408	,,	V. சேஷாசாரியர், அரசாணிமங்கலம்	...	5	0
468	,,	M. C. துரைராஜன், சென்னை	...	2	0
502	,,	P. நரஸிம்மையங்கார், பட்டுக்கோட்டை	...	2	0
539	,,	S. ஸம்பத் நாராயணன்	...	2	0
597	,,	S. K. ஸ்ரீநிவாஸாசாரியர், சோகத்தூர்	...	2	0
607	,,	பூவராஹஸ்வாமி ஐயங்கார், கூவகம் கிராமம்	...	2	0
638	ஸ்ரீமதி	A. ரங்கநாயகி அம்மாள், அன்னூர்	...	2	0
686	ஸ்ரீ	V. S. ஸ்ரீநிவாஸராகவாசாரியர், தி. நகர்	...	2	0
458	ஸ்ரீ	T. K. க்ருஷ்ணமாசார்யர், திருக்கண்டலம்	...	4	0
445	ஸ்ரீ	P. T. சேஷாத்ரியாசாரியர், பாலூர்	...	5	0

சந்தாதாரர்கட்கு ஒரு விண்ணப்பம்

இவ்வர்ஷம் (1945) முடிவதற்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ளன. பலர் இன்னும் இவ்வர்ஷத்துச் சந்தாப் பணத்தைச் செலுத்தாதிருக்கின்றனர். அந்தந்த வர்ஷத்துச் சந்தாப் பணம் அந்தந்த வர்ஷத்தில் செலுத்தப்பட்டு விடுதல் இருதிறத்தார்க்கும் அநுகூல மென்பது யாவரும் அறிந்த தொன்று. ஆதலின், இதுவரை இவ் வர்ஷத்துச் சந்தாத் தொகையைச் செலுத்தாத சந்தாதாரர்கள், நானே டிஸம்பர் மாஸத்துக்குள்ளேனும் தமது சந்தாத் தொகையை க்ருபையுடன் செலுத்தி உதவும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

[குறிப்பு] பணம் அனுப்பும் சந்தாதாரர்கள், தாங்கள் பணம் அனுப்பும்போது, தங்கள் சந்தா நம்பரையும் மணியார்டர் கூபனில் தயைசெய்து குறித்தனுப்ப வேண்டுகிறோம்.

ஸம்பாதகர்.

Regd. No. M. 4437.

10142

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற கீழ்க் கண்ட புஸ்தகங்கள் ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ ஆபீஸில் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ. பை.	மற்றவர்கட்கு ரூ. அ. பை.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளீ (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12—0	1—0—0
3.	உக்திநிஷ்டாபரஞோத்யோதம் („)	0—8—0	0–12—0
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1--8—0
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0–12—0
6.	ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
7.	ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
8.	ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் :—

“மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், **சென்னை.”**

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed at Sri Sudarsana Press, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.